
தமிழரசு
மலர்:11 இதழ்:2
16-7-1980

# தமிழ்நாடு அரசின்

# 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை

தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 1980--81ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்ட மன்ற பேரவை முன் வைத்து 1980ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 2ஆம் நாளன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயற்றலும் ஈட்டலும் காத்தலும்—காத்த
வகுத்தலும் வல்ல தரசு

என்பது வள்ளுவப் பெருந்தகையாரின் வாய்மொழி. தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை மேலும் மேலும் உருவாக்குதல், அவ்வாறு வந்தவற்றை ஒருவழித் தொகுத்தல், தொகுத்தவற்றைப் பேணிக் காத்தல், காத்தவற்றை அறநெறி வழிச் செலவிடுதல் ஆகியவற்றில் வல்லமை கொண்டதே அரசு ஆகும். இந்த இலக்கணத்திற்கு ஏற்ப, 1979–80ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும், 1980–81ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடுகளையும், இந்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன்.

நடப்பு நிதி ஆண்டின் முதல் நான்கு திங்கள்களுக்கு வேண்டிய மானியக் கோரிக்கைக்கான முன் அனுமதி, தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி நிலவியபோது, நாடாளுமன்றத்தில் பெறப்பட்டதை, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். எஞ்சியுள்ள எட்டுத் திங்கள்களுக்கும் சேர்த்து, இந்த ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்ட மன்றப் பேரவையின் முன் வைத்து, ஆண்டு ஒதுக்கீட்டுக்கான ஒப்புதலைக் கோருகிறேன்

சனநாயகத் தத்துவத்தின் அடிப்படையில் மக்களாட்சி மலர்ந்து, இந்தப் புதிய அமைச்சரவை பதவியேற்றபின், குறுகிய காலத்திற்குள், போதுமான அளவு வாய்ப்பும், வசதியும் இல்லாதிருந்தபோதிலும், முக்கிய

மான கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் கூடுமான வரையில் மதிப்பளிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு, நிதி ஒதுக்கீடுகளை இந்த அரசு செய்திருக்கிறது. நடப் பாண்டில் இந்த அரசு முன்னுரிமை அளிக்க இருக்கும் திட்டப் பணிகளுக்கும், வேலைத் திட்டங்களுக்கும் தேவைப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகளையும், மாற்றங்களை யும் தொடர்ந்து செய்யும் என்று அவையினர்க்கு உறுதி கூறுகிறேன்.

இன்றைய நிலையில், இந்தியா முழுவதும் நிலவி வருகின்ற நெருக்கடியான பொருளாதார நிலை தமிழகத் தையும் தாக்கியிருக்கிறது. அனைத்திந்திய பொருளா தாரத்தில் பணவீக்கச் சக்திகள் வலிவுடன் தலைதூக்கி யிருக்கின்றன. விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவேண் டும்; வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்; உற்பத்தியைப் பெருக்க வேண்டும்; வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த அக்கறைகொண் டுள்ளது. இவற்றிற்கான நிதி நிருவாகக் கொள்கைகளை யும், வரிவிதிப்புக் கொள்கைகளையும் வகுக்கும் அதிகாரம் பெரிதும் மத்திய அரசிடமே உள்ளது. தேசிய பொரு ளாதாரக் கொள்கைகளைச் செம்மைப்படுத்தி, மாநில அரசுகளுக்கு வலிவூட்டி, மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு இந்த அரசு முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் நல்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். தமிழ் நாட்டில் உடனடித் தேவைகள், குறுகிய காலத் தேவைகள், நீண்ட காலத் தேவைகள் ஆகிய வற்றைக் கருத்தில் கொண்டு திட்டங்கள் தீட்டப் பட்டுள்ளன. நடைமுறையில் இருந்துவரும் திட்டங் களைத் தொடர்ந்து செம்மையாகச் செயல்படுத்து வதற்கும், புதிய திட்டங்கள் பலவற்றைச் சீரான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும் இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

## வேளாண்மை

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப் படையாக உள்ள வேளாண்மை வளர்ச்சிக்கான பணி களைப் பரவலாக்கும் முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. சென்ற ஆண்டு 62·29 இலட்சம் டன் அரிசி உற்பத்தியும், 19·03 இலட்சம் டன் சிறுதானியங்கள் உற்பத்தியும், 2·60 இலட்சம் டன் பயறு வகைகள் உற்பத்தியும் ஆக மொத்தம் 83·92 இலட்சம் டன் உணவு உற்பத்தியாவதற்கான வசதிகள் உருவாக்கப்பட்டன. இந்த ஆண்டில் 65 இலட்சம் டன் அரிசி உற்பத்தியும், 21·45 இலட்சம் டன் சிறு தானியங்கள் உற்பத்தியும், 3·75 இலட்சம் டன் பயறு உற்பத்தியும் ஆக மொத்த உணவு உற்பத்தி 89·20 இலட்சம் டன்களாக உயருவதற்கான வாய்ப்புக்களை வேளாண்மைத் துறை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது.


நெல், பருத்தி போன்ற பயிர்களுக்கான விதைகளைச், சிறந்த விவசாயிகள் உதவியுடன் உற்பத்தி செய்யும் பதினான்கு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதனுடன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யும் பணியைச் சிறப்பாக நடத்து வதற்காக நான்கு எண்ணெய் வித்து உற்பத்தி மையங்கள் தொடங்கப்படும். தெரிந்தெடுக்கப்பட்ட சிறந்த விவசாயிகள் அடிப்படை விதைகளைப் (Foundation seeds) பெற்று, அவற்றிலிருந்துத் தக்க விதைகளை உற்பத்திச் செய்து வேளாண்மைத் துறைக்கு வழங்கவும், அவ்வாறு அவர்கள் உற்பத்தி செய்யும்போது பயிர்கள் தக்க முறையில் பயிரிடப் படுகின்றனவா என்பதைத் தொடர்ந்து கவனித்து வருவதற்கும் முயற்சிகள் செய்யப்படும்.

தமிழ் நாட்டில் பயறு வகைகளின்

உற்பத்தி, தேவையை விடக் குறைவாகவே உள்ளது. எனவே, பயறு வகைகளின் உற்பத்திப் பெருக்கத்திற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை, மொத்தம் 30 இலட்ச ரூபாய்ச் செலவில் செயல்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. இதன்படி மூல விதைகள் (Breeder Seeds) தனியே உற்பத்தி செய்யப்பட்டு, மாநிலம் முழுவதும் தரமான விதைகள் படிப்படியாக வழங்கப்படும். எதிர்காலத்தில் இதன் விளைவாகப், பயறு வகைகளின் உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னை உற்பத்தியை அதிகரிப்பதற்கென மொத்தம் 54 இலட்ச ரூபாய்ச் செலவில், கூடுதலாகப் பெரிய அளவில் எட்டு தென்னை நாற்றுப் பண்ணைகள் அமைக்கப்படும். ஆண்டுக்குச் சுமார் 13 இலட்சம் நாற்றுகள் தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வினியோகம் செய்து வருவதற்குப் பதிலாக, மொத்த உற்பத்தி 31 இலட்சம் நாற்றுகளாக உயர்ந்து, அதிகமான அளவில் தென்னை நாற்றுகள் வழங்கப்படும். புதிதாகத் தொடங்கப்பட்ட பெரியார் மாவட்டத்தில், தாராபுரத்தில் விவசாயிகள் பயிற்சிப் பள்ளியொன்று இந்த ஆண்டில் திறக்கப்படும்; இதன்பின் மாநிலத்திலுள்ள எல்லா மாவட்டங்களும் விவசாயப் பயிற்சிப் பள்ளிகள் கொண்டனவாக அமைந்துவிடும்.

சென்ற ஆண்டு விதைச் சான்றளிப்பு அமைப்பை வேளாண்மைத் துறையிலிருந்து தனியாகப் பிரித்துத் தனி நிறுவனமாக ஆக்கியதையொட்டி, அதனை மேலும் விரிவுபடுத்துவதற்கு 10 இலட்ச ரூபாய்ச் சிறப்பு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தோட்டப் பயிர்கள் இயக்குநரகம் சென்ற ஆண்டு புதிதாக அமைக்கப்பட்டதை மன்ற உறுப்பினர்கள் அறிவீர்கள். மதுரையிலுள்ள சிறுமலைப் பகுதியில் பெரிய பழத்தோட்டம்



ஒன்றையும் கல்ராயன் மலைப் பகுதியில் ஒரு பெரும் பழவகைப் பண்ணையையும் நிறுவுவதற்கு இந்த ஆண்டில் வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், மாநிலம் முழுவதிலுமுள்ள அரசுப் பழப் பண்ணைகளின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக மொத்தம் 7·66 இலட்ச ரூபாய் இந்த ஆண்டு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை விளை பொருள்களை நன்முறையில் விவசாயிகள் விற்றுப் பலனடைவதற்கு 10 தரம் பிரிக்கும் ஆய்வுக் கூடங்களைப் புதிதாக நிறுவுவதற்கும், 5 ஆய்வுக் கூடங்களுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் அரசு மொத்தம் 14·7 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்துள்ளது. இந்த ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வேளாண்மைத்துறையில் பல்வேறு புதிய ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்வதற்காக 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பயறு வகைகள், சிறு தானியங்கள் இவற்றின் மேம்பாடு பற்றிய ஆராய்ச்சிகளுக்கு இதன் மூலம் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

### இன்றியமையாப் பொருட்களை வழங்குதல்

தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப நிறுவனம், மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலைக்குக் கூடுதலான விலையில், நெல்லை விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்கியதன் மூலம் விவசாயிகளுக்கு உதவி

புரிந்துள்ளது. சென்ற குறுவைப் பருவத்திலும், சம்பாப் பருவத்திலுமாக மொத்தம் 2 இலட்சம் டன் நெல்லை இவ்வாறு கூடுதலான விலையில் இந்த நிறுவனம் கொள்முதல் செய்துள்ளது; பொது விநியோக முறையில் வழங்குவதற்கான அரிசியைக் கணிசமான அளவில் இக்கழகம் தன் கையிருப்பில் வைத்துள்ளது. மேலும், தனது பணிகளை விரிவாக்கி, ஆண்டுக்குச் சுமார் 2 இலட்சம் டன்களுக்கு மேலாகச் சென்ற ஆண்டு முதல் சிமிட்டி விநியோகிக்கும் பணியையும் நடத்திவருகின்றது. முதன்முறையாக மண்ணெண்ணெய் சில்லறை விநியோகத்தில் நேரடிப் பொறுப்பேற்று, அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் சிற்றூர்களிலும் மண்ணெண்ணெய் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளது. மாநிலம் முழுவதும் லெவி சர்க்கரையின் மொத்த விநியோகப் பொறுப்பை, இக்கழகம் 1979 டிசம்பர் மாதம் முதல் மேற்கொண்டுள்ளது. இவ்வாறு பல்வேறு இன்றியமையாப் பொருள்களிலும் வாணிபம் நடத்துவதற்கு வகை செய்யும் முறையில் இக்கழகத்திற்கு 6·84 கோடி ரூபாய் கூடுதல் பங்கு மூலதனமாகத் தர வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### கூட்டுறவு

விவசாயிகள் வேளாண் பொருட்களைக் கூட்டுறவு முறையில் விற்பனை செய்ய ஊக்கம் அளிக்கப்படும். இதற்கான வசதிகளை அதிகரிக்கும் பொருட்டு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. 76,000 டன் சேமிப்பு திறன் கொண்ட 498 கிராம கூட்டுறவுச் சங்கக் கிடங்குகளும் 16 கூட்டுறவு விற்பனைச் சங்கக் கிடங்குகளும் கட்டப்பட்டு வருகின்றன. 1980–81 ஆண்டில் 29,000 டன் சேமிப்புத் திறன் கொண்ட 200 புதிய கிராமக் கூட்டுறவுச் சங்கக் கிடங்குகளும், 5 கூட்டுறவு விற்பனைச் சங்கக் கிடங்குகளும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென வரவு-செலவுத் திட்டத்தில் 59 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அழுகும் பொருட்களைச் சேமித்துவைக்க தமிழ்நாடு கூட்டுறவு இணையம் ஒரு குளிர்சாதன சேமிப்புக் கிடங்கை வைத்துள்ளது. மாநிலத்தில் மேலும் 4 இடங்களில் ஒவ்வொன்றும் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் குளிர் சாதன கிடங்குகள் இந்த ஆண்டில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 4,000 டன் காய்கறி, பழ வகைகள் போன்ற அழுகும் பொருட்களைச் சேமித்து வைத்து விவசாயிகளுக்கும் நுகர்வோர்க்கும் சாதகமான விலையில் விற்க வசதி செய்யப்படும்.

### வேளாண்மைக் கடன் நிவாரணம்

விவசாயிகளுக்கு நிவாரணம் அளிப்பது பற்றி அரசுக்குப் பரிந்துரை செய்யத் தமிழக அரசினால் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு 1979-ஆம் ஆண்டில் செய்த பரிந்துரைகளின் பேரில் தமிழக அரசு ஏறக்குறைய 40 கோடி ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்குப் பல சலுகைகள் அளித்தது. இச்சலுகைகளுக்குப் பின்னும் கடன் சுமையினால் வருந்தும் விவசாயிகளின் கடன்களை முழுவதுமாக ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு மாநில அரசுக்குக் கணிசமான நிதி உதவி செய்ய வேண்டுமென்று கோரி, மத்திய அரசுக்கு நாம் எழுதியுள்ளோம். இக்கோரிக்கையை மத்திய அரசு ஆதரவாகப் பரிசீலிக்கும் என்று நாம் நம்புவதுடன், மத்திய அரசின் கணிசமான உதவி நமக்குக் கிட்டவேண்டும் என்பதில் இம் மாமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த கருத்துக்கு நாம் இந்த நிதி நிலை அறிக்கையின் மூலம் குரல் கொடுக்க விரும்புகின்றோம்.

இதற்கிடையில் தமிழக அரசு, தம் சொந்த நிதி பொறுப்பிலிருந்து, விவசாயப் பெரு மக்களுக்கு மேலும் சில சலுகைகளை வழங்க முன் வந்துள்ளது. அரசு அளித்திருந்த தக்காவிக் கடன்களில் சுமார் ரூபாய் 21 கோடி இன்னும் பாக்கி நிற்கின்றது. இதில் ஏறக்குறைய ரூபாய் 5 கோடி, டிராக்டர்கள் வாங்குவது, இயந்திரக் கலப்பை வாங்குவது, கிணறு தோண்டுவது போன்ற உற்பத்தியை அதிகரிப்பதற்கு உதவும் முதலீடு களுக்கான கடன்களாகும். இதுபோக, எஞ்சியுள்ள சுமார் ரூபாய் 16 கோடி, விவசாயிகளுக்குப் பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள தக்காவிக் கடன் களில் உள்ள நிலுவையாகும். வட்டியும் முதலுமாகச் சேர்ந்த, இந்த ரூபாய் 16 கோடி நிலுவையையும் ரத்து செய்துவிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த வரையிலே, ரிசர்வ் வங்கியிலிருந்து பெறும் நிதி உதவியையும் பொது மக்களிடமிருந்து பெறும் வைப்புத் தொகை களையும் கொண்டுதான் கடன் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகின்றது. கடன்கள் உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தப்படாவிட்டால், ரிசர்வ் வங்கியி லிருந்து பணம் நமக்கு கிடைக்காது. கூட்டுறவுக் கடன் திட்டம் செவ்வனே செயல்பட வேண்டுமென்றால், வாங்கிய கடன்களை விவசாயிகள் செலுத்துவது இன்றி யமையாததாகும். குறுகிய காலக் கடன்களாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த தொகையில் சுமார் ரூபாய் 97 கோடி, பல ஆண்டுகளில் பருவ நிலைப் பொய்த்ததன் காரணமாகவும், விளைச்சல் பாதிக்கப் பட்டதன் காரணமாகவும் மத்திய காலக் கடன்களாக நீட்டிக்கப்பட்டுள்ளன. அத்தொகையில் 1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளன்று ஏறத்தாழ ரூபாய் 80 கோடி அசல் மட்டும் நிலுவையில் இருந்தது. வட்டித்தொகையில் இதுவரை ஏறத்தாழ ரூபாய் 15 கோடி நிலுவையில் உள்ளது. இதில் 5 ஏக்கர் நிலத்திற்குக் குறைவான உடைமை உள்ள விவசாயிகளின் கடன் நிலுவைகள் ஏறத்தாழ 50 விழுக்காடு இருக்கும். ஆகவே, இந்த சிறிய விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலுவையில் அசலாகச் சுமார் ரூபாய் 35-கோடியும், இதுவரை செலுத்த வேண்டிய வட்டி நிலுவையாகச் சுமார் ரூ. 7 கோடியும் இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது. இந்தச் சிறிய விவசாயிகள் செலுத்த வேண்டிய கடன் நிலுவை முழுவதையும் முதலும் வட் டியும் உட்பட, அடியோடு ரத்து செய்து விடுவது என்று தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் அரசுக்கு ரூபாய் 42 கோடிக்கு மேல் இழப்பு ஏற்படும். தக்காவிக் கடன்களை ரத்து செய்வதன் மூலம் ரூபாய் 16 கோடி இழப்பு ஏற்படும். இவை இரண்டும் சேர்ந்து ரூபாய் 58 கோடி அல்லது ரூபாய் 60 கோடி கடன் நிலுவைகளை ரத்து செய்ய தமிழக அரசு முன் வந்துள்ளதை விவசாயப் பெருமக்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறோம். இந்த அளவில் இழப்பை ஏற்பது மாநில நிதி நிலைமையைப் பெரிதும் பாதிக்கும்; இருந்த போதிலும் விவசாயிகளின் நிலைமையை முன்னிட்டு துணிகரமான இந்த நடவடிக்கையைத் தமிழக அரசு எடுக்க முன் வந்துள்ளது. எனவே இந்த இழப்பை ஈடு கட்ட மத்திய அரசின் நிதி உதவியைக் கோரியுள்ளோம்.

இச்சலுகைகளுக்குப் பின்னும் செலுத்தப்பட வேண்டிய கூட்டுறவுக் கடன்களை விவசாயப் பெரு மக்கள், தங்கள் சமுதாயப் பொறுப்பை உணர்ந்து, உடனடியாகச் செலுத்தி கூட்டுறவுக் கடன் இயக்கம் தீவிரமாகவும், செம்மையாகவும் நடப்பதற்கு வழி வகுத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.




## கால்நடை வளம்

இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை மருந்துகள் உற்பத்தி நிலையத்தைச் சிறப்பாக மேம்படுத்துவதற்குக் கால்நடை வளர்ப்புத் துறை திட்டமொன்றை வகுத்துள்ளது. இதன்படி, பல்வேறு நோய் தடுப்பு மருந்துகள் தயாரிப்பதற்கான வசதிகளைப் பெருக்குவதற்கு மொத்தம் 34·85 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அரசு கால்நடைப் பண்ணைகளில், தரமான கன்றுகளை வளர்ப்பதற்கான திட்டமொன்றை அரசு மேற்கொண்டுள்ளது; இதற்காக மொத்தம் 20 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பத்து கால்நடை மருந்தகங்கள் புதிதாகத் திறக்கப்படும். ஐந்து மருந்தகங்கள், கால்நடை மருத்துவ மனைகளாகத் தரம் உயர்த்தப்படும். காங்கேயம் ரகக் காளைகளை உற்பத்தி செய்வதற்கென பண்ணை ஒன்று, இந்த ஆண்டு அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. ஓங்கோல் மாடுகளை வளர்க்கும் பிரிவு ஒன்றை அரசு கால்நடைப் பண்ணை ஒன்றில் நிறுவுவதற்கு 1·77 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவம் பற்றிய புதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்வதற்காக வேளாண்மைப் பல்கலைக் கழகத்துக்கு இந்த ஆண்டு ரூபாய் 20 இலட்சம் தரவும் வகை செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைக்குப் பயன்படும் உழவு மாடுகள் வேலை நேரத்தில் விபத்து காரணமாகவோ, நோய் காரணமாகவோ இறக்க நேரிட்டால், அவற்றுக்கு ஈடு செய்யும் வகையில் காப்புறுதித் திட்டம் ஒன்றைப் புதிதாக உருவாக்கிச் செயல்படுத்தும் பொருட்டு, பொது காப்புறுதி நிறுவனத்துடன் (General Insurance Corporation) அரசு தீவிரமாகக் கலந்தாலோசித்து வருகின்றது.

## பால் பெருக்கம்

பால் பெருக்கு முயற்சிகளையொட்டிக் கூடுதலாக 4 நடமாடும் மருத்துவப் பிரிவுகளை அமைக்க அரசு நிதி ஒதுக்கம் செய்துள்ளது. இராமநாதபுரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் இந்த நடமாடும் மருந்தகங்கள் செயல்படும். இந்தியப் பால்பண்ணை நிறுவனத்தின் உதவியுடன் செயல்படும் ''பால் பெருக்குத் திட்டம்'' இந்த மாவட்டங்களில் செயல்படாததால், அரசே தனது நிதியிலிருந்து இந்த மாவட்டங்களுக்கு இவ்வசதியைச் செய்து கொடுக்க முடிவு செய்துள்ளது. இத்துறையின் செலவுக்கென 73 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## காடுகள்

காட்டு வளத்தை மேம்படுத்துவதில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. மண் அரிப்பைத் தடுப்பதில் காடுகளின் முக்கிய பங்கை உணர்ந்துள்ள அரசு, மேட்டூர் அணைக்கட்டின் நீர்பிடிப்புப் பகுதிகளில் 26 இலட்சம் செலவில் காடுகள் வளர்க்கத் திட்டமிட்டுள்ளது. 1980–81ஆம் ஆண்டில் 146 இலட்சம் ரூபாய் செலவில் எரிபொருளுக்காக மரங்கள்

வளர்க்கத் அரசு திட்டமிட்டுள்ளது. மக்களின் எரி பொருள் தேவைக்காகத் தரிசு நிலங்களிலும், குன்று களிலும், சாலை ஓரங்களிலும், ஆறுகள். கால்வாய்கள் இவற்றை ஒட்டியும் மரங்கள் வளர்க்க மிகப் பெரிய திட்டமொன்றை அரசு சுவீடன் நாட்டு உதவியுடன் செயல்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் 25 இலட்சம் ரூபாய் செலவில் காட்டுப்பகுதிகளில் சாலைகள் அமைக்கவும், 35 இலட்சம் ரூபாய் செலவில் குடியிருப்புகள் கட்டவும் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டுத் திட்டத்தில் இந்தத் துறைக்கென 650 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மீனளமும் மீனவர் நலனும்

மீனவருக்கு அதிக லாபம் ஈட்டித் தரக்கூடிய இறால் வளர்ப்பின் செயல் முறைகளை விளக்க 10 இடங் களில் மாதிரிப் பண்ணைகள் 16·5 இலட்சம் ரூபாய் செலவில் இவ்வாண்டு அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. அதிராமபட்டினத்தில் அரசு இறால் பண்ணை அமைக்க வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப் பட்டுள்ளது; 100 பேர்கள் கொண்ட மீனவர் கூட்டுறவு சங்கத்தின் மூலம் 50 ஹெக்டேர் பரப்புடைய இப் பண்ணை பயன்படுத்தப்படும். மாநிலத்திலுள்ள அனைத்து நீர் நிலைகளில் மீன் வளர்க்க 350 மில்லியன் மீன் குஞ்சுகள் தேவையானவை. 109 இலட்சம் ரூபாய் செலவில் 30 ஹெக்டேர் பரப்பில் 100 மில்லியன் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்ய மீன் குஞ்சு வளர்ப்பிடங்களை ஏற்படுத்தும் திட்டத்தை அரசு இவ்வாண்டு தொடங்கும். தற்போது உற்பத்தி செய்யப் படும் மீன் குஞ்சுகளின் எண்ணிக்கையைப்போல் இது சுமார் இரண்டு மடங்கு என்பதும், இவற்றின் மதிப்பு 50 இலட்சம் ரூபாய் என்பதும் இவற்றை வளர்த்து நீர் நிலைகளில் விடுவதன் மூலம் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள 25,000 டன் மீன்கள் கூடுதலாக உற்பத்தியாகும் என்பதும் குறிப்பிடத்தக்கவையாகும். மீனளத்துறை தற்போது நான்கு ஆழ்கடல் மீன் பிடி கலங்களை (Trawlers) இயக்கி வருகின்றது. ஆழ்கடல் மீன் வளத்தை நன்முறையில் பயன்படுத்திக் கொள்ளத்தக்க வகையில், மேலும் பல ஆழ்கடல் மீன் பிடிக்கலங்களை வாங்குவதற்கும், மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அவற்றை இயக்குவதற்குமான திட்டங் களை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர் குடி யிருப்புகள் மொத்தம் 214இல் 20 குடியிருப்புகள் நல்ல குடிநீர் வசதியுடன் இருந்து வந்தன. சில ஆண்டுகளில் அரசு திட்டமிட்டுச் செயலாற்றியதன் பயனாக 106 இலட்ச ரூபாய் செலவில் மேலும் 30 குடியிருப்புகள் நல்ல குடிநீர் பெற்று உள்ளன. இந்த ஆண்டு மேலும் 29 குடியிருப்புகள் 43 இலட்ச ரூபாய் செலவில் நல்ல நீர் வசதி பெற்று விடும். சுமார் 5 கோடி ரூபாய்ச் செலவில் மீதமுள்ள 145 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி தருவதற்கான திட்டத்தை வகுத்துச் செயல் படுத்தும். மீனவர் குடியிருப்புகளுக்குச் சாலைகள் அமைக்க இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மீனவர் வீடு கட்டும் திட்டத்திற்கென இந்த ஆண்டும் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பாசனம்

பாசன வசதிகளைப் பெருக்குவதிலும், தற் போதுள்ள பாசன வசதிகளை நன்முறையில் செயல்

படுத்துவதிலும் தக்க கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் கீழ் நெடு நாட்களாகப் பணி நடந்து வந்த நீரார் அணை வேலையும் நீராறு குடைவு வேலையும் (Tunnel) முடிக்கப் பட்டு விட்டன. இந்தத் திட்டத்தின் கீழ் ஆயக்கட்டுப் பகுதியை விரிவாக்கும் வேலை தொடங்கப்பட்டு, இந்த ஆண்டு 9,100 ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகத் தண்ணீர் விடப்படும். சாத்தனூர் அணை வலப்புறக் கால்வாய்த் திட்டம் இவ்வாண்டு முழுமையாக நிறைவேற்றப்படும்; திட்டமிட்டபடி மொத்தம் 20,000 ஏக்கர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதிகள் பெற்றுவிடும். தர்மபுரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட பாம்பாறு திட்டமும் இந்த ஆண்டு முடிக்கப்பட்டு 4,200 ஏக்கர் புதிதாகப் பாசன வசதி அடையும். திருநெல்வேலி மாவட்டத்தில் குண்டார் அணைத் திட்டம், தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தும்பளஹல்லி, நாகவதி, ஈச்சம்பாடி, தொப்பையாறு, வாணியாறு அணைக்கட்டுத் திட்டங்கள், இராமநாதபுரத்தில் உள்ள வேம்பக்கோட்டை அணைக்கட்டுத் திட்டம் ஆகியவற்றுக்கான பணிகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. ஆண்டுத் திட்டத்தில் பெரிய-நடுத்தர-சிறிய பாசனத் திட்டங்களுக்கென ஒதுக்கப்படும் தொகை 1979–80ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீடுகளில் 25·20 கோடி ரூபாயாக அமைந்தது; இந்த ஆண்டு இது 32·74 கோடி ரூபாயாக உயரும்.

பெரிய அணைத் தேக்கங்களில் உள்ள நீரைத் தக்க முறையில் விநியோகிப்பதற்காகச் சிறப்பு நடவடிக்கைகளை எடுத்ததன் வாயிலாகக், கீழ் பவானி அணைக்கட்டிலிருந்து வேர்க்கடலை போன்ற பயிர் விளைவிப்பதற்காகக் கூடுதலாகத் தண்ணீர் விடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். முதன் முறையாக மேட்டூர் உயர் மட்டக் கால்வாய்ப் பகுதியில் 40,000 ஏக்கர் நிலங்கள் கூடுதலாக ஒரு பயிர் விளைவிப்பதற்காகத் தண்ணீர் விடப்பட்டதையும், கல்லணைக் கால்வாய்ப் பகுதியில் கூடுதலாக ஒரு போகம் புஞ்சை பயிரிடுவதற்குத் தண்ணீர் விடப்படுவதையும் மன்ற உறுப்பினர்கள் வரவேற்பர் என நம்புகிறேன்.




மின் உற்பத்தி

மின்சார உற்பத்தியைப் பெருக்குவதிலும் மின்சாரத்தை வழங்குவதிலும் அரசு முனைப்பாகப் பல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. குறைவான அழுத்தம் (Low Tension) உள்ள மின் கடத்திகள் இந்தியாவிலேயே மிக அதிகமான அளவில் உள்ள மாநிலம் தமிழ்நாடு ஆகும். 2·4 இலட்சம் கிலோ மீட்டர் நீளமுள்ள இத்தகைய கடத்திகளைக் கொண்டுள்ள தமிழ்நாடு மின் வாரியம், இதுவரை 8·9 இலட்சம் பாசன கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுத்துள்ளது; மொத்த குடியிருப்புகள் 63,605இல், 63,431 குடியிருப்புகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப் பட்டுவிட்டது; மாநிலத்திலுள்ள எல்லா தாழ்த்தப் பட்டோர் குடியிருப்புகளுக்கும் மின்சாரம் அளிக்கப் பட்டுவிட்டது; 7·33 இலட்சம் தெரு விளக்குகள் மின் வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன; குடிசைகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டத்தின்கீழ் 1·93 இலட்சம் குடிசைகளுக்கு மின் இணைப்பு

கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பரவலாக மின்சாரத்தை விநியோகித்து வரும் அதே நேரத்தில், மின்சாரம் அனுப்புவதில் ஏற்படும் இழப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் மின்வாரியம் தொடர்ந்து எடுத்து வந்துள்ளது. இதன் விளைவாக 1974–75இல் 21·45 சதவிகிதமாக இருந்த மின் இழப்பு (Line Loss) 1978–79ஆம் ஆண்டில் 18·10 சதவிகிதமாக குறைந்து உள்ளதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் இரண்டாவது இயந்திரத்தை நிறுவும் பணி இந்த ஆண்டு ஆகஸ்டு திங்களில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சேர்வலாறு நீர்மின் திட்டமும்



காடம்பாறை நீர் ஏற்று மின் நிலையத்தின் முதல் இயந்திரமும் 1982–83ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும். மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கான பல்வேறு திட்டங்களை மத்திய மின்சார ஆணைக் குழுவின் ஒப்புதலுக்காகத் தமிழ்நாடு அரசு அனுப்பியுள்ளது. மேட்டூர் அணைக்குக் கீழே காவிரியில் மின் உற்பத்தி செய்யும் திட்டம், மேல் அமராவதி நீர்மின் திட்டம், சண்முகா நதி நீர்மின் திட்டம், மணிமுத்தாறு நீர்மின் திட்டம், மேல் தாமிரபரணி நீர்மின் திட்டம் ஆகியவை இவற்றுள் குறிப்பிடத் தக்கவையாகும். இந்தத் திட்டங்களுக்கு மத்திய அரசு விரைவில் தனது ஒப்புதலை வழங்குவதன் மூலம் மாநில அரசு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எடுக்கும் விரைவான முயற்சிகளுக்கு உதவ வேண்டுமென்று கோருகின்றேன். வங்கக் கடலில், கடல் நீர் மேற்பரப்பிலும் ஆழ்கடலிலும் உள்ள வெப்ப வேறுபாட்டைப் பயன்படுத்திப் புதியதொரு அறிவியல் அடிப்படையில், மின்சாரம் தயாரிக்கும் திட்டம் (Ocean Thermal Energy Conversion) அமைக்க ஆய்வுகள் நடத்த மின்வாரியம் மத்திய அரசின் ஒப்புதலைக் கோரியுள்ளது. வெளிநாட்டு உதவியுடன் செயல்படவிருக்கும் இந்த ஆய்வுக்கு மத்திய அரசு விரைந்து அனுமதியளிக்குமென நம்புகிறேன். மின்சார திட்டங்களுக்காக வரும் ஆண்டில் மொத்தம் 155·76 கோடி ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றுக்காக, அரசு நிதியிலிருந்து 75 கோடி ரூபாய் அளிப்பதற்கு வரவு-செலவுத் திட்டம் வகை செய்துள்ளது.

மின் உற்பத்திச் செலவும், வெளியிலிருந்து வாங்கும் மின்சாரத்தின் விலையும் சமீப காலமாக மிகவும் உயர்ந்து வருகின்றன. கேரள மாநிலத்தினால் 1977–78ஆம் ஆண்டில் சுமார் 12·5 பைசாவுக்கு விற்கப்பட்டு வந்த மின்சாரம், இந்த ஆண்டு பிப்ரவரி திங்களிலிருந்து 28 பைசாவாக விலை உயர்த்தப்பட்டுள்ளது. அவ்வாறே நெய்வேலியிலிருந்து பெறப்படும் மின்சாரத்தின் விலை 1977–78ஆம் ஆண்டில், இருந்துவந்த 14·37 பைசாவிலிருந்து, 18·88 பைசாவாக தற்போது உயர்ந்துள்ளது. சிங்கரேணியிலிருந்து பெறும் நிலக்கரியின் விலை சென்ற ஆண்டு சூலைத் திங்களிலிருந்து டன்னுக்கு 82 ரூபாயிலிருந்து 110 ரூபாயாகவும் மற்ற பகுதிகளிலிருந்து பெறும்

நிலக்கரியின் விலை 80 ரூபாயிலிருந்து 123 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. இதன் விளைவாக, இந்த ஆண்டு மின்சாரத்தை உற்பத்திச் செய்யும் செலவு மிகவும் அதிகமாகி உள்ளது. மின் வாரியம் தனது நிதி நிலையைச் சீர்படுத்துவதன் இன்றியமையாமையை இந்நிலை சுட்டிக் காட்டுகின்றது. மின் வாரியம் இது பற்றித் தக்க ஆய்வுகள் நடத்தி வருகின்றது.

குறைந்த அழுத்த (Low Tension) மின்சாரத்தை வழங்குவதில் மின்வாரியத்துக்குச் செலவு, மின் அலகு (Unit) ஒன்றுக்கு 43 பைசா ஆக இருக்கின்றது. வேளாண்மை உற்பத்தியின் இன்றியமையாமையை உணர்ந்த அரசு வேளாண்மைக்காகப் பயன்படுத்தப்படும் மின் கட்டணத்தை 14 பைசாவாக, அதிலும் சிறு விவசாயி கட்கு 12 பைசாவாகக் குறைந்த நிலையில் அமைத் துள்ளது. ஒத்த பிற மாநிலங்களுடனும் ஒப்பிடுகையில் இக்கட்டணம் குறைவானது என்பதை அனைவரும் அறிவர். இந்நிலையில் மின் கட்டணத்தைப் பாக்கி ஏதுமின்றி, விவசாயிகளும் மற்றவர்களும் மனமுவந்து செலுத்துவதன் வாயிலாக, மின்வாரியம் தனது பணி களைத் தடங்கலின்றிச் செய்ய உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## தொழில் வளர்ச்சி

பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் தொடங்குவதற்கு இசைவுக் கடிதங்கள், உரிமங்கள் அளிப்பதற்காகத் தமிழக அரசு பரிந்துரை செய்து மைய அரசிற்கு அனுப்பிவரும் விண்ணப்பங் களின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. 1979ஆம் ஆண்டில் 49 விண்ணப்பங்களைத் தமிழக அரசு பரிந்துரை செய்துள்ளது. நடப்பு ஆண்டில் அதாவது சனவரித் திங்கள் முதல் சூன் திங்கள் வரை 47 விண்ணப்பங்களைத் தமிழக அரசு பரிந்துரை செய்து மைய அரசிற்கு அனுப்பியுள்ளது. மொத்தம் 80 விண்ணப்பங்கள் மைய அரசின் முடிவுக்காக நிலுவையில் இருக்கின்றன. இவற்றிற்கு விரைந்து அனுமதி கிட்டுமென்று நம்புகிறேன்.

அரியலூரில் தமிழ்நாடு சிமின்ட் நிறுவனம் நிறுவிய ஆலை முடிக்கப்பட்டுச் செயல்படத் துவங்கி யுள்ளது. இன்டர்கான்டினென்டல் லெதர் என்ற பெயரில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) கூட்டுத் துறையில் நிறுவிய தோல் நிறுவனம் தனது உற்பத்தியைத் துவங்கியுள்ளது. மேலும், பொதுத் துறையில் வெடி மருந்துகள் தயாரிப்பதற்கான திட்டம் ஒன்றை இந்த நிறுவனம் (TIDCO) மேற்கொண்டுள்ளது. கூட்டுத்துறையில், பழைய கப்பல்களைப் பிரித்து எடுக்கும் திட்டத்தை நிறுவுவதற்காகவும் நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1980–81ஆம் ஆண்டில் மொத்தம் 3·75 கோடி ரூபாய் அரசு தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துக்கு அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

தொழிலில் பின்தங்கிய பகுதிகளுக்கு மத்திய அரசு அளிக்கும் மூலதன மானியத் திட்டம் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் (SIPCOT) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1979–80ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் வழங்கப்பட்ட மொத்த உதவித் தொகையான சுமார் 69 கோடி ரூபாயில் தமிழ்நாட்டில் சுமார் 10 கோடி ரூபாய் பெற்று முதலிடம் வகிப்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலில் பின்தங்கியுள்ள இதே பகுதிகளில், புதிய தொழில்களுக்கும் விரிவுபடுத்தும் தொழில்களுக்கும் மாநில அரசின் விற்பனை வரிக் கடன்

திட்டத்தையும் இந்த நிறுவனம் செயல்படுத்தி வருகின்றது. இதற்கென இந்த நிறுவனத்திற்குச் சென்ற ஆண்டு 180 இலட்சம் ரூபாய் அரசு அளித்ததுடன் இந்த ஆண்டில் 225 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்துள்ளது. இராணிப்பேட்டை, ஒசூர் ஆகிய இடங்களில் புதிய தொழில் பகுதிகளை இந்நிறுவனம் அமைத்துள்ளது. இதைப் போன்று இராமநாதபுரம் மாவட்டத்திலும், புதுக்கோட்டைப் பகுதியிலும் புதிய தொழில் பகுதிகளைத் தொடங்குவதற்காக உதவும் முறையில் 50 இலட்ச ரூபாய் பங்கு மூலதனம் இந்த நிறுவனத்திற்கு அளிக்க வரவு-செலவுத் திட்டம் வகை செய்துள்ளது.

சர்க்கரைத் தொழிலைப் பொறுத்தவரையில் கடந்த சில ஆண்டுகளாக குழப்பமான நிலை இருந்து வருகிறது. 1978ஆம் ஆண்டு சர்க்கரை மீதான எல்லா கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டபோது, புதிதாக ஆரம்பிக்கப்படும் சர்க்கரை ஆலைகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும் சர்க்கரை ஆலைகளுக்கும் அதற்கு முன் மைய அரசால் அளிக்கப்பட்டு வந்த ஆயத் தீர்வை சலுகைகள் கைவிடப்பட்டன. இதனால் இந்த சலுகைகளை எதிர்நோக்கி திட்டங்களைச் செயல்படுத்தியவர்கட்கு இழப்பு ஏற்பட்டது. இது வன்றி, புதிய ஆலைகள் நிறுவுவதற்கு நிதி நிறுவனங்கள் கடன் வழங்கத் தயங்கியதால் புதிய ஆலைகள் நிறுவுவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தென்னாற்காடு மாவட்டம் பெரியசெவலையில் ஆரம்பிக்கப்பட்ட ஆலையின் வேலைகள், நிதி நிறுவனங்கள் கடன் உதவி கொடுக்காததால் நின்று விடாதவாறு, தமிழக அரசு பங்கு மூலதனத்தையும் வேண்டிய அளவு கடனையும் அளித்து நிதி உதவி செய்துள்ளது. இதன் விளைவாக, வரும் அக்டோபர் திங்களில் இந்தப் புதிய ஆலை உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சர்க்கரை நுகர்வோர், கரும்புப் பயிரிடுவோர், சர்க்கரை ஆலைகள் அதிலும் குறிப்பாகப் புதிதாக நிறுவப்படும் அல்லது விரிவாக்கம் செய்யப்படும் ஆலைகள் ஆகிய அனைவருக்கும் பயன் தரக்கூடிய ஏற்ற கொள்கை ஒன்றை மைய அரசு விரைந்து வகுத்துச் செயல்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உற்பத்தித் திறன், சாதகமான விலை இவற்றின் காரணமாக நடப்பு ஆண்டில் தமிழ் நாட்டிலுள்ள எல்லா நூற்பு ஆலைகளும் நன்கு செயல் பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் தனியார் துறையில் 36 புதிய நூற்பு ஆலைகள் அமைப்பதற்கும், செயல்பட்டு வரும் ஆலைகளில் 16 ஆலைகளை விரிவுபடுத்துவதற்கும் வேலைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. அவை நிறைவு பெறும்போது, 19 ஆயிரம் பேர் கூடுதல் வேலை வாய்ப்பு பெறுவார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கைத்தறித் தொழில் முன்னேற்றம் பற்றி ஆளுநர் தனது உரையில் முன்பே சுட்டிக்காட்டி உள்ளார். இந்த ஆண்டில் 2 வடிவமைப்பு நிலையங்கள் (Design Centres) அமைப்பதற்கு 7 இலட்ச ரூபாயும் வீடு கட்ட உதவும் மானியத்துக்காக 10 இலட்ச ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கைத்தறித் துறைக்குப் பயனளிக்கும் வகையில் தேசிய பஞ்சாலை நிறுவனம் (National Textile Corporation), மாநில கைத்தறிக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (Co-optex) ஆகியவற்றுடன் இணைந்து துணிகளைப் பதப்படுத்தும் தொழிற்சாலையைக் கூட்டுத் துறையில் அமைக்கத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. கைத்தறித்

துறைக்கென ஆண்டுத் திட்டத்தில் 452 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூடுதல் வேலை வாய்ப்புகள் உருவாக்கும் பொருட்டு, 1980–81ஆம் ஆண்டு மேலும் 8,000 ஏக்கர் பரப்பில் முசுக்கொட்டை உயரிய ரகம் பயிரிட அரசு ஏற்பாடுகள் செய்து வருகிறது. பட்டுப்புழு வளர்ப்பில் முக்கிய பங்கு வகிக்கும் மாவட்டங்களின் தலைநகரங்களில் 45 இலட்ச ரூபாய் செலவில் பட்டு வளர்ப்பு மையங்கள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இந்த மையங்களில் மாதிரிப் பண்ணைகள் அமைக்கப் பட்டு விவசாயிகள் பட்டுப்பூச்சி வளர்க்கும் முறைகளைக் கண்டு பயன்பெற வசதிகள் செய்யப்படும். மேலும் 28 இலட்சம் ரூபாய்ச் செலவில் சீரிய முட்டைகள் உற்பத்திச் செய்வதற்கான திட்டமும் செயல்படுத்தப் படும். 1979–80ஆம் ஆண்டில் திட்டச் செலவாக 138 இலட்சம் செலவிடப்பட்டதற்கு எதிராக, 1980–81 ஆம் ஆண்டுத் திட்டத்தின் கீழ் மொத்தம் 265 இலட்சம் ரூபாய் இந்தத் துறைக்கு நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

சென்ற ஆண்டு 20 கூட்டுறவுத் தீப்பெட்டிச் சேவை சங்கங்கள் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கெதிராக 26 சங்கங்கள் மூலம் 2,500 தீப்பெட்டி உற்பத்தி நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. இவை முழு உற்பத்தித் திறனை அடையும் போது, இவை மூலம் 52,000 பேர் வேலை வாய்ப்புப் பெறுவார்கள். மேலும் சென்ற ஆண்டு 2,000 நிலையங்கள், தனியார் துறையில் குடிசைத் தொழிலாகத் தீப்பெட்டி உற்பத்தி நிலையங் களை ஆரம்பிக்க தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் சான்றிதழ்கள் வழங்கியுள்ளது; இந்த நிலையங்கள் மூலம் 40,000 பேர் வேலை வாய்ப்புப் பெறுவார்கள். இந்த ஆண்டு, இந்தத் தொழிலின் கீழ்க் கூடுதலாக 10 சேவை சங்கங்களும் 20 தொழில் கூட்டுறவுச் சங்கங்களும் தொடங்கத் திட்டமிட்டு 24.87 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. தீப்பெட்டித் தொழில் நன்கு செயல்பட வேண்டுமானால், தேவையான மூலப் பொருட்களைப் பெற்றுத் தருவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவது அவசியம். எனவே, கூட்டுறவுத் துறையிலுள்ள, குடிசைத் தொழில் தீப்பெட்டி நிலையங்களுக்குத் தேவையான மரக் குச்சிகளைத் தயாரித்துக் கொடுப்பதற்கு மூன்று ஆலைகள் கூட்டுறவு முறையில் அமைப்பதற்காக, இந்த ஆண்டில் 3·19 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆலைகளுக்குத் தேவையான மரங்களை அந்தமான் நிக்கோபார் தீவுகளிலிருந்துப் பெறுவதற்கான ஏற்பாடு களும் செய்யப்பட்டுள்ளன.



தமிழ் நாட்டில் கிடைக்கும் தேங்காய் நாரைப் பயன்படுத்திப் பல்வேறு பொருட்களைச் செய்வ தற்கான திட்டமொன்றை அரசு தயாரித்து வரு கின்றது. இத்திட்டம் விரைவில் இறுதி செய்யப்பட்டு உடனடியாகச் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக கன்னியாகுமரியிலும், சேலத்திலும், தேங்காய் நார் தயாரிப்பதற்கும் அதிலிருந்து கயிறு

தயாரிப்பதற்கும் பத்து கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்காக 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

### கிராமத் தொழில்கள்

மண்பாண்டத் தொழில், செக்கு மூலம் எண்ணெய் தயாரித்தல், கையால் காகிதம் செய்தல், பனைவெல்லம் காய்ச்சுதல், சோப்பு தயாரித்தல் போன்ற பல்வேறு கிராமத் தொழில்களுக்கு ஆதரவு தருவதன் வாயிலாகக் கிராமப்பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் முயற்சியில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பெரும் பணியாற்றி வருகின்றது. 1979–80ஆம் ஆண்டில் சுமார் 37,000 பேர்களுக்குக் கூடுதலாக இவ்வாரியத்தின் மூலம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. 35 கோடி ரூபாய் மதிப்புள்ள கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன; இந்த ஆண்டு இந்த விற்பனை 39 கோடி அளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாநில அரசு இந்த வாரியத்துக்கு 158 இலட்சம் ரூபாய் நிதி அளிக்க வகை செய்துள்ளது.

மேலும் இத்தகைய தொழில்களை நடத்த பல்வேறு தொழிலாளர்களுக்கான தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் முயற்சிகள் விரைந்து மேற்கொள்ளப்படும். பொற்கொல்லர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்காக, வேலையற்று இருக்கும் பொற்கொல்லர்கள் பற்றிய விவரங்கள் உடனடியாகத் தொகுக்கப்படும்; அதனடிப்படையில் பொற்கொல்லர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஏழை எளியோர்க்கு மலிவு விலையில் திருமணத் தாலி செய்து தரும் திட்டம் இவை மூலம் செயல்படுத்தப்படும்.

### சாலை, சாலைப் போக்குவரத்து

சாலைகளை நல்ல நிலையில் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை நன்குணர்ந்த இந்த அரசு நடப்பு ஆண்டில் அரசுச் சாலைகள் பராமரிப்பிற்காக 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும் பேருந்து செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை அரசே ஏற்று மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் 1979–80 ஆம் நிதி ஆண்டில் 6 கோடி ரூபாய் செலவிட வகை செய்யப்பட்டது: இதன் பயனாக 2,000 கிலோ மீட்டர் சாலைகளில் பணி முடிந்துள்ளது; சுமார் 500 கிலோ மீட்டர் சாலைகளில் பணி தொடர்ந்து நடை பெறுகின்றது. இந்த ஆண்டில் இதை உயர்த்தி 10 கோடி ரூபாய் செலவிடவும் அரசு வகை செய்துள்ளது. 1,500 மக்கட் தொகை கொண்ட ஊர்கள் அனைத்திற்கும் சாலைப் போக்குவரத்து செய்து கொடுக்கும் திட்டத்தின்கீழ் 1979–80ஆம் ஆண்டில் 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது; இந்த ஆண்டு இதற்கென 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு செய்யப்பட்ட விரிவான ஆய்வின்படி, 476 புதிய பேருந்து வழித்தடங்கள் திறப்பதன் மூலம் 18 இலட்ச மக்கள் தொகை கொண்ட 968 பஞ்சாயத்துக்களுக்குப் போக்குவரத்து வசதி செய்து கொடுக்க முடியுமென்றும், இரண்டாம் கட்டமாக 426 வழித்தடங்களைத் திறப்பதன் மூலம் மேலும் 22 இலட்ச மக்கள் தொகைக்குப் பலனளிக்க முடியுமென்றும் கண்டறியப்பட்டது. இரண்டாம் கட்டத்தைச் செயல்படுத்த சாலைகளை மேம்படுத்துவதும் ஓரளவிற்கு அவசியமென்று கண்டறியப்பட்டது. 1979–80ஆம் ஆண்டில் 32 இலட்ச மக்களுக்கு பலனளிக்கும் வகையில் 1,395 குடியிருப்புகளைத் தொடும் வகையில் புதிய பேருந்து வழித்தடங்கள் திறக்கப்


பட்டன; தொழிலாளர் நல உறவின் காரணமாகவும் நல்ல நிர்வாகத்தினாலும் போக்குவரத்து நிறுவனங்களில் இரண்டு நிறுவனங்களைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் 1978–79ஆம் ஆண்டிற்காக உயர்ந்த அளவு சிறப்பு ஊதியம் (போனஸ்) தொழிலாளர்கள் பெற்றுள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 1979–80இல் மொத்தம் 1,321 புதிய பேருந்துகள் அரசுப் பேருந்து நிறுவனங்களின் பொறுப்பின் கீழ்க் கூடுதலாகச் சேர்க்கப்பட்டன. இந்த ஆண்டில் பழைய பேருந்துகளைப் புதுப்பிக்கும் வகையிலும், கூடுதலாகச் சேர்க்கும் முறையிலும் மொத்தம் 1,800 புதிய பேருந்துகள் விடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### சுற்றுலா வளர்ச்சி

சுற்றுலாப் பயணிகளுக்கு உதவும் வகையில் மதுரையிலும், கோவையிலும், புதிய சுற்றுலா விடுதிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கட்டி வருகிறது. கன்னியாகுமரி, இராமேஸ்வரம் ஆகிய இடங்களைத் தகுந்த முறையில் சுற்றுலாத் தலமாக வளர்ச்சி அடையச் செய்ய அரசு வல்லுநர்களைத் திட்டம் தீட்டக் கோரியுள்ளது. சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மூலதனமாக 15 இலட்ச ரூபாயும், கடனாக 15 இலட்ச ரூபாயும் அளிப்பதற்கு அவையின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. மாமல்லபுரத்தில் பயணிகளுக்கான வசதிகள் செய்து தருவதற்கும், மேம்பாட்டுப் பணிகளைச் செயல்படுத்துவதற்குமாக அரசு 12 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு செலவிடத் திட்டமிட்டுள்ளது.

### கல்வி

மேல் நிலைப் பள்ளிக் கல்வியைச் செயல்படுத்துவதில் தமிழகம் இந்தியாவிலேயே முன்னணியில் இருந்து வருகிறது. 1980ஆம் ஆண்டில் மொத்தம் ·18 இலட்சம் பேர் 12-வது ஆண்டுத் தேர்வுகளை எழுதியுள்ளார்கள். அவர்களில் 25 ஆயிரம் பேர் தொழில் பற்றிய கல்விப் பயிற்சி பெற்றவர்களாக இருப்பார்கள் என்பதும், அதில் சுமார் 6,600 பேர் மாணவியர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். 1979ஆம் ஆண்டில் புகுமுக வகுப்பில் தேர்வு எழுதியவர்கள் எண்ணிக்கையான 79,000த்துடன் இதனை ஒப்பிடும்போது, மேல்நிலைக் கல்வியைப் பள்ளிகளுடன் இணைத்ததன் மூலம் எந்த அளவுக்குக் கல்வி வசதிகளை அரசு பரவலாக்கியுள்ளது என்பது தெளிவாகும். 1980–81ல் மேலும் 150 உயர்நிலைப் பள்ளிகளில் மேல்நிலைப் பிரிவுகள் துவக்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதன் விளைவாக மொத்தம் 1,242 பள்ளிகள் மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டு மாநிலத்தில் பல்வேறு பகுதிகளிலும், குறிப்பாகக் கிராமப் பகுதிகளில், மேல்நிலைக் கல்விக்கான வசதிகள் பரவலாக்கப்பட்டுள்ளன. மேல்நிலைக் கல்விக்கான ஆய்வுக்கூடங்கள் கட்டுவதற்காகவும், அறிவியல் கருவிகளை வழங்குவதற்காகவும், நூல் நிலையங்கட்குப் புத்தகங்கள் தருவதற்காகவும் மொத்தம் 3·3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் பல்வேறு நிலைகளில் மொத்தம் புதிதாக 2,800 ஆசிரியர்கள் பதவிகளும் உருவாக்கப்படும்.





கிராமங்களில், ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பள்ளிகளில் மொத்தம் 4,000க்கும் மேற்பட்ட ஆரம்ப இடைநிலைப் பள்ளிகள் தக்க கட்டிடமின்றி இன்றும் இருந்துவருவது அரசு அண்மையில் எடுத்த கணக்கெடுப்பின்படி தெரிய வருகிறது. இவை அனைத்திற்கும் 3 ஆண்டுகளுக்குள் கட்டிடங்கள் கட்டும் பணியை மேற்கொள்வதற்காக அரசு சிறப்பான திட்டமொன்றை வகுத்துள்ளதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகிறேன். இதற்கென, இவ்வாண்டில் மொத்தம் 5·5 கோடி ரூபாய் மானியம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்படும். 5ஆம், 6ஆம் நிலை ஊராட்சி ஒன்றியங்கள் கட்டிடங்கள் கட்டுவதற்கேற்ற வகையில் அவற்றிற்குத் தரப்படும் மானியத்தை இத் திட்டத்தின் கீழ் அதிகரிக்க அரசு முடிவு செய்துள்ளதை மன்ற உறுப்பினர்கள் பெரிதும் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

பள்ளிகளில் சேரும் மாணவர், இடையில் நின்று விடுவதைத் தவிர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 6 முதல் 11 வயது மாணவ மாணவியரில், முதல் வகுப்பில் சேர்ந்த 100 பேர்களில், ஐந்தாம் வகுப்புவரை படிக்காமல், இடையில் நின்று விட்டவர்கள் எண்ணிக்கை 51 ஆக 1973-74ஆம் ஆண்டில் இருந்தது. இது 1978-79ஆம் ஆண்டில் 38 சத வீதமாகவும், 1979-80ஆம் ஆண்டில் 33 சத வீதமாகவும் குறைந்துள்ளதை மன்ற உறுப்பினர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பர் என்பதில் ஐயமில்லை.

பள்ளிகளில் சேர்ந்து கல்வி பயிலும் வாய்ப்பினைப் பெறாதவர்களுக்கும், பள்ளியிலே கல்வியை இடையிலே நிறுத்திவிட்டவர்களுக்கும் பயன் அளிப்பதற்காகச் செயல்பட்டு வரும் முறைசாராக் கல்வி இயக்கம் வரும் ஆண்டில் மேலும் பலப்படுத்தப்படும். ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் கூடுதலாக இரண்டு கல்வி மையங்களைத் திறப்பதற்காக 7·85 இலட்ச ரூபாயும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் மொத்தம் 600 பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் வாயிலாக 600 மையங்கள் நடத்துவதற்காக 3 இலட்ச ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1979-80ல் 4 இலட்சம் பேர் முறைசாராக் கல்வி இயக்கத்தின் கீழ் பங்கு பெற்றனர். இந்த ஆண்டில் மொத்தம் 4·8 இலட்சம் பேர் பயன் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டவாறு கோவை, திருச்சிப் பல்கலைக் கழகங்களை நிறுவ ஆரம்ப நிதி ஒதுக்கம் முறையே ஒரு இலட்சம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே புதிதாக அறிவியல் ஆய்வு நிலையம் அமைப்பதற்காக ஆரம்ப நிதி ஒதுக்கமாக ஒரு இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைப்பது பற்றிய விவரங்களை முடிவு செய்ய வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அவர்கள் ஆய்வின் அடிப்படையில் அடுத்த ஆண்டு இதனை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இந்த ஆண்டு பாலிடெக்னிக்குகளில் கூடுதலாக 546 இடங்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. குமார பாளையத்தில், துணி உற்பத்தி பற்றிய சிறப்பு பாலி டெக்னிக் ஒன்றும், தஞ்சையில் பெரியார்-மணியம்மை அறக்கட்டளை அமைக்கும் மகளிர் பாலிடெக்னிக் ஒன்றும், கோவையில் தனியார் பாலிடெக்னிக் ஒன்றும் அமைய இவ்வாண்டு அரசு அனுமதித்து உள்ளது. மேலும், பல்வேறு பாலிடெக்னிக்குகளில், புதிய தொழிற் கல்வி வகுப்புகள் தொடங்குவதற்கும் அரசு ஏற்பாடுகள் செய்துள்ளது. இத்துறைக்காகத் திட்டத் தின்கீழ் 141 இலட்சம் ரூபாயும், மொத்தமாக 857 இலட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## இளைஞர் நலத் துறை

சென்ற ஆண்டு புதிதாக அமைக்கப்பட்ட விளையாட்டு, இளைஞர் நலத்துறையின் கீழ் மூன்று சிறப்பு விளையாட்டுப் பயிற்சி விடுதிகளும் மூன்று விளையாட்டு பயிற்சிப் பள்ளிகளும் அமைக்க இவ்வாண்டு மொத்தம் 10·92 இலட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 25 வட்ட, ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் விளையாட்டு அரங்குகள் கட்டுவதற்கு 5·15 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. மாவட்டத் தலைநகரங் களில் நீச்சல் குளங்கள் அமைக்க உதவும் வகையில் 2 இலட்ச ரூபாய் ஆரம்ப நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. இதுவன்றி, சென்னையில் வட்டாரப் பயிற்சி நிலையமொன்றை அமைப்பதற்கும் 15 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. விளையாட்டு, இளைஞர் நலப் பணிகளுக்காக, இந்த ஆண்டு மொத்தம் 274 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

## மருத்துவம்

மருத்துவ வசதிகளை மாநிலமெங்கும் பரவலாக் கப்பட வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையில் கடந்த சில ஆண்டுகளாக அரசு செயல்பட்டு வருவதை மன்றம் நன்கு அறியும். தற்சமயம் இயங்கி வருகின்ற 224 நடமாடும் மருத்துவக் குழுக்களோடும், 164 சிறு சுகாதார நிலையங்களுடனும் மேலும் 50 சிறு சுகாதார மையங்கள் (Mini Health Centres) இவ்வாண்டில் நிறுவுவதற்கும், பல்வேறு வட்ட மருத்துவ மனைகளில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துவதற்கும், மாவட்ட மருத்துவ மனைகளில் அறுவைக் கூடங்களுக்குக் குளிர் சாதன வசதியை அமைப்பதற்கும், மாவட்ட மருத்துவ மனைகளில் மின் உற்பத்தி இயந்திரங்களை நிறுவுவதற்கும் அரசு மொத்தம் 61 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவன்றி, கிராமப்பகுதிகளில் மருத்துவர்கள் மன முவந்து சென்று தங்குவதற்கு வகை செய்யும் விதத்தில் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் முயற்சிக்கு 70 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள மருத்துவக் கல்லூரியை ஒட்டிய மருத்துவ மனைகளுக்குக் கூடுதல் வசதிகளைச் செய்து தருவதற்காக மொத்தம் 24 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டுள்ளது.

கிங் நிறுவனத்தில் மருந்துகள் உற்பத்திப் பிரிவில் கூடுதல் வசதிகள் செய்வதற்காக இவ்வாண்டில் 6·1 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 9·5 இலட்சம் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்படும். 11 இலட்சம் குழந்தைகட்கு பி.சி.ஜி. (B.C.G.) தடுப்பு ஊசி போடப்படும். இளம் பிள்ளைவாதத் தடுப்புச் சொட்டு மருந்து 4 இலட்சம் குழந்தைகட்கு அளிக்கப்படும். மாநிலத்திலேயே முதன் முறையாக டைபாய்ட் தடுப்பு ஊசி 7·5 இலட்சம் குழந்தைகட்கு போடப்படும். 20 இலட்சம் குழந்தை

கட்கு கண்ணொளி காக்கும் முயற்சியாக ஏ உயிர்ச் சத்து (A. Vitamin) சொட்டு மருந்தாகத் தரப்படும். இவ்வாண்டில், கிராமப் பகுதிகளில் சென்று இளநிலை மருத்துவர்கள் பணிபுரிய, திட்டமொன்றும் புதிதாகச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இத் திட்டத்தின் படி, மருத்துவர்கள் ஆறு திங்கள் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் மற்றொரு ஆறு திங்கள் வட்ட மருத்துவ மனைகளிலும் பணியாற்றுவார்கள்.

இந்திய மருத்துவ முறையில் சிறப்பு நாட்டம் கொண்டுள்ள இந்த அரசு, 15 மருத்துவ மனைகளில் புதிதாகச் சித்த மருத்துவப் பிரிவுகள் துவங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. தஞ்சை, பெரியார் மாவட்ட மருத்துவ மனைகளில் சித்தப் பிரிவுகளுக்கான கட்டிடங்கள் கட்டும் வேலை இவ்வாண்டு மேற்கொள்ளப்படும்.

### குடிநீர் வசதி

தமிழ் நாட்டிலுள்ள குடியிருப்புகளை அவற்றின் குடிநீர் வசதியின் அடிப்படையில் ஆறு பிரிவுகளாக வகைப்படுத்தி குடிநீர் வசதி செய்து தரும் முயற்சியைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மேற்கொண்டு வருகிறது. இதன்படி குடியிருப்புகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன :—

(1) குடியிருப்புகளிலிருந்து ஒரு கிலோ மீட்டர் வரையிலும் குடிநீர் ஆதாரங்களே இல்லாத இடங்கள்.

(2) ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் குடிநீர் ஆதாரங்கள் இருந்தும் அவை நல்ல குடிநீராக இல்லாத இடங்கள்.

(3) ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் ஆதாரங்கள் இருப்பினும் போதுமான அளவு நீர் இல்லாத இடங்கள்.



(4) ஒரு கிலோ மீட்டருக்குள் குடிநீர் ஆதாரங்கள் இருந்தும், அவைகள் பாதுகாக்கப்படாமலோ தனி நபர்கள் உடைமையாகவோ உள்ளவை.

(5) குடியிருப்புக்குள் நல்ல குடிநீர் ஆதாரங்கள் இல்லாமல் இருப்பினும், ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் வேறு நல்ல குடிநீர் ஆதாரம் உள்ள இடங்கள்.

(6) குடியிருப்புக்குள்ளேயே நல்ல குடிநீர் ஆதாரங்கள் இருக்கும் இடங்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவற்றுள், முதலாம், இரண்டாம் வகைக் குடியிருப்புகளுக்கு இவ்வாண்டு குடிநீர் வசதி செய்து தரும் பணி நிறைவேற்றி முடிக்கப்படும். சுமார் 20 இலட்சம் மக்கள் பயன் அடையும் இப் பணிக்கு மொத்தம் 25 கோடி ரூபாய் மொத்தச் செலவு ஆகும். இந்தப் பணி சிறப்பாக நிறைவேறியதை அடுத்து, கோடைக் காலத்தில் நீர் வற்றிவிடும் மூன்றாம் வகைக் குடியிருப்புகள் 6,500ல் நீர் வசதிகளை அதிகப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இதற்கு மொத்தம் 45 கோடி ரூபாய் செலவு ஆகலாம் எனக் குடிநீர் வாரியம் கணக்கிட்டுள்ளது. 26 இலட்சம் மக்களுக்குப் பயன்தரக்கூடிய இப்பணியைச் செயல்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது. குடிநீர் வடிகால்

வாரியம் 17 நடமாடும் குழுக்கள் மூலம் 235 பழுது பார்ப்போர் உதவியுடன் 18,000 குழாய்க் கிணறுகளை மாநிலம் முழுவதிலும் பராமரித்து வருகின்றது.

இந்த வாரியத்தின் மூலம், 32 நகராட்சி குடிநீர் வழங்குத் திட்டங்களையும் 74 நகரப் பஞ்சாயத்துக்களுக்கான திட்டங்களையும் 9 வடிகால் வசதித் திட்டங்களையும் அமைக்கும் பணிகள் சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்டன. இதுவன்றி 7 நகர குடிநீர் வழங்குத் திட்டங்களும் 22 நகரப் பஞ்சாயத்துக்கள் குடிநீர் வழங்குத் திட்டங்களும் புதிதாக அமைக்க அனுமதி அளிக்கப்பட்டது. இவ்வாண்டில் இவ்வாறு செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களில் 32 திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. கோவை நகருக்கும் அடுத்துள்ள 15 நகர பஞ்சாயத்துகளுக்கும் குடிநீர் வழங்கும் சிறுவாணித் திட்டம் முடிவுறும் நிலையை எய்தியுள்ளது. இது முற்றிலும் நிறைவேறுவதற்கு முன்னதாகவே. தற்போது கூடுதல் தண்ணீர் கோவை நகருக்குக் கொடுக்கப்படுகின்றது. இதனால் கோவை நகருக்கு நாள் ஒன்றுக்கு மொத்தம் 7 மில்லியன் காலன் தண்ணீரை உறுதியுடன் அளிக்க முடிகின்றது. ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்ற இப்பணிகளைச் செயல்படுத்த 1980–81இல் மாநில அரசு 6·83 கோடி ரூபாயைக் குடிநீர் வடிகால் வாரியத்துக்கு அளிக்க இந்த வரவு-செலவுத் திட்டம் வகை செய்கின்றது.

### வீட்டு வசதித் திட்டம்

இந்த அரசால் தொடங்கப்பட்ட கிராமப்புற வீடு கட்டும் திட்டம் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 3,000 ரூபாய் மதிப்புள்ள வீடுகள் கட்டுவதற்கு 2,400 ரூபாய் வரை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடனாக அளிக்கப்பட்டு வந்தது; விலைவாசி உயர்வை முன்னிட்டு இவற்றின் மொத்தத் தொகையை 3,750 ரூபாயாக இவ்வாண்டு உயர்த்தி கடன் தொகையும் 3,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 1978–79 ஆம் கூட்டுறவு ஆண்டில் 5·45 கோடி ரூபாய் மொத்தம் செலவிடப்பட்டு 7,430 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. 1979–80ஆம் ஆண்டில் மொத்தம் 15·56 கோடி ரூபாய் செலவிடப்பட்டு 31—5—1980 வரை 22,318 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன. இத் திட்டம் நிதி நிறுவனங்களின் உதவி பெறப்பட்டு செயல்படுத்தப்படும். இத்திட்டம் இந்த ஆண்டும் முனைப்பாகச் செயல்படுத்தப்படும். இதற்காக இந்த ஆண்டு இத்திட்டத்தில் அரசு தன் பங்காக இரண்டு கோடி ரூபாய் மாநில வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்திற்கு அளிக்க வகை செய்துள்ளது.

குடிசை மாற்றுத் திட்டத்தின்கீழ் சென்னை மாநகரில் சென்ற ஆண்டு 4,088 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன. ரூபாய் 80 இலட்சம் செலவில் மற்ற குடிசைப் பகுதிகளுக்கு மாநில அரசே அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தது. உலக வங்கி உதவியுடன் மேலும் 16,000 குடும்பங்கள் பயன் பெறும் வண்ணம் சுமார் 153 இலட்சம் ரூபாய் செலவில் மேம்பாட்டுப் பணிகள் சென்ற ஆண்டில் செய்து முடிக்கப்பட்டன. உலக வங்கித்திட்டத்தின் இறுதி ஆண்டான இந்த ஆண்டில், அந்தத் திட்டத்தின் கீழ் குடிசை மேம்பாட்டுப் பணிகளுக்காக 120 இலட்சம் ரூபாயும் மாநில அரசு நேரிடையாக 100 இலட்சம் ரூபாயும் செலவிட வகை செய்யப்பட்டுள்ளது. உலகத் தமிழ் மாநாட்டையொட்டி மதுரை நகரில் முக்கியமான சில குடிசைப் பகுதிகளை மாற்றியமைத்து 1,008 குடியிருப்புகள்


மொத்தம் 105 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

## சென்னை நகர் மேம்பாடு

சென்னைப் பெருநகர் கழிவுநீரகற்று வாரியம் இவ்வாண்டு பல புதிய பணிகளைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. செங்குன்றத்திலிருந்து தண்ணீர் கொண்டு வர மூன்றாவது பெரும் குழாய் அமைக்கவும், சென்னை மாநகராட்சியில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கலை விரிவுபடுத்தவும், கழிவு நீர் அகற்றக் குழாய்களைச் சீரமைக்கவும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் பணிகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன. இப்பணிகளுக்காகப், பெருநகர் குடிநீர் கழிவு நீரகற்று வாரியத்திற்கு மொத்தம் 11·02 கோடி ரூபாய் கடனாகவும் மானியமாகவும் இவ்வாண்டு வழங்கப்படும். சென்னை நகரில் தனிப்பட்டோரால் அமைக்கப்பட்ட குடியிருப்புக்களில் தெருக்களை மேம் படுத்துவதற்காகப்புதிய திட்டமொன்றுக்காக 50இலட்ச ரூபாய் கொண்ட நிதி (Fund) ஒன்றை அரசு உருவாக்கி யுள்ளது. இதனைப் பயன்படுத்தி தனிப்பட்டோரால் அமைக்கப்பட்ட குடியிருப்புகளிலுள்ள தெருக்களை மாநகராட்சி மேம்பாடு செய்து, பின்னர் அந்தப் பகுதி யிலுள்ள மக்களிடமிருந்து மேம்பாட்டுச் செலவைத் திரும்பப் பெற்று நிதியில் சேர்ப்பதன் மூலம் தொடர்ந்து இப்பணி நடைபெற வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாண்டில் தெருவிளக்கு அமைப்பதற்கான பணி களைத் தொடர்ந்து நடத்துவதற்குச் சென்னை மாநகராட்சிக்கு 20 இலட்சம் ரூபாய் நிதி வழங்கவும் வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது. சென்னை நகரில் பெருகிவரும் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்ய ஓரளவுக்கு உதவும் விரைவுப் போக்குவரத்து அமைப்பு (Mass Rapid Transit System) அமைக்க மத்திய அரசு உடனடியாக முன்வர வேண்டும் என மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## வேலைக்கு உணவு—வேலை வாய்ப்புறுதித் திட்டம்

கிராமங்களில் வேலையற்று இருப்போர்க்கு வேலை வாய்ப்புறுதி அளிக்கும் திட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசு 1979 பிப்ரவரித் திங்கள் ஆளுநர் உரையில் அறிவித்தது. மத்திய அரசு வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ்க் கோதுமை மட்டும் அளித்து வந்த நிலை மாறி அரிசியை அளிக்க முன் வந்ததை யொட்டி வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ்க் கிடைக்கும் உணவுப் பொருட்களையும் வேலைவாய்ப் புறுதி திட்டத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. பாசனத்துறை, நெடுஞ்சாலைத்துறை, வேளாண்மை துறை ஆகியோர் கூடுதலான பணிகளை மேற்கொள்வதற்காக வேலைக்கு உணவுத் திட்டத் தின் கீழ்க் கிடைக்கும் அரிசி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் அந்தத் துறையினர், சாலை அமைத்தல், வாய்க்கால்களை வெட்டுதல், மண் வளப் பாதுகாப்பு போன்றபணிகளில் வேலைகளைச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது இந்த வகையில் 1979-80ஆம் ஆண்டில் மொத்தம் 4,948 டன்கள் அரிசி இந்தத் துறையினரால் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், ஊரக வளர்ச்சித் துறை கிராமப்புறங்களில் பள்ளிக் கட்டிடங்கள், ஊராட்சி மன்றங்கள், மகளிர் மன்றங்கள் ஆகியவற்றை புதியதாக கட்டும்போதும் ஊராட்சி ஒன்றியங்களின் கீழுள்ள பல்வேறு நிர்வாகக் கட்டிடங்கள், சாலைகள், பாசன ஆதாரங்கள், குடிநீர் ஆதாரங்கள் போன்றவற்றை பராமரிக்கும்போதும் வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு 50,636 டன்கள் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. மொத்தம் 43,199 வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு



32,904 வேலைகள் முடிவுற்றன. 23 இலட்சம் பேர்களுக்கு மேல் வேலை செய்து, மொத்தம் 142 இலட்சம் உழைப்பு நாட்கள் (Mandays) பணியாற்றி, 9·27 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகளைச் செய்துள்ளனர். இத்தகைய பணிகளை மேற்கொண்டு வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின்கீழ் பணி செய்ய முன் வருவார்க்கு வேலை வாய்ப்பளிப்பதற்கான ஊரக வளர்ச்சித் துறையின் இயல்பான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலாக 3·76 கோடி ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கமும் செய்யப்பட்டது. சென்ற ஆண்டு வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின் கீழ் 1,89,000 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டது. இந்த ஆண்டும் இப்பணி தொடர்ந்து நடத்தப்படும். பல்வேறு துறைகள் தத்தம் நிதி ஒதுக்கங்களுடன் உணவுக் நானியங்களைக் கூடுதலாகப் பெற்று பணிகளை மேற்கொள்ளும். வேலை வாய்ப்புறுதித் திட்டத்தை இணைத்துக் கூடுதல் பணிகளை மேற்கொள்வதற்கு ஊரக வளர்ச்சித் துறைக்கு 10 கோடி ரூபாய் இவ்வாண்டு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் மொத்தம் 55,584 டன் அரிசி பயன்படுத்தப்பட்டது ; இந்த ஆண்டு முதற்கட்டமாக ஒரு இலட்சம் டன் அரிசி அளிக்க வேண்டுமென மத்திய அரசைக் கோரியுள்ளோம்.

## கிராம இளைஞர் தொழிற் பயிற்சி

கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கட்குக் குறுகிய காலக் கைத்தொழிற் பயிற்சி அளிக்கும் திட்டத்தை மாநில அரசு சென்ற ஆண்டு தொடங்கியது. இத் திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு 5,600 இளைஞர்கள் பயிற்சி பெற்றனர். இத்தகைய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசும் முன்வந்துள்ளது. பல்வேறு பயிற்சி நிலையங்களில் கூடுதல் வசதிகளை உருவாக்குவதன் மூலம், இந்த ஆண்டு 16,200 இளைஞர்கட்கு இத்தகைய பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கதர் கிராமத் தொழில் வாரியம், கிராம வளர்ச்சித் துறையின் கீழுள்ள பயிற்சி நிலையங்கள், தொழிற் பயிற்சி நிலையங்கள், தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் போன்ற அமைப்புகளின் மூலம் இப்பயிற்சி அளிக்கப்படும்.

## கிராம வளர்ச்சிப் பணிகள்

இணைப்புச் சாலைகள், குடிநீர் வசதி, பள்ளிக் கட்டிட வசதி, போன்ற பல்வேறு வசதிகளை கிராமப் பகுதிகளில் ஒருங்கிணைந்த முறையில் தருவதற்கான 'தன்னிறைவுத் திட்டம்' சென்ற ஆண்டு 69 ஊராட்சி ஒன்றியங்களில் தொடங்கப்பட்டது. இந்த ஆண்டு மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்களில் இது தொடங்கப்படும், பல்வேறு துறைகளும், தத்தம் வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைந்த முறையில் இந்தப் பகுதிகளில் நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளனர். அதற்கும் மேலான சிறப்பான நிதி ஒதுக்கமாக 10 கோடி ரூபாய் இதற்கென வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

கிராமங்களில் நிலையான வேலையின்றி வசதியற்று, ஆதரவு ஏதுமின்றி ஏழை, எளியவராய் வறுமைக் கோட்டிற்குக் கீழும் வாடுபவர் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்படும். அவர்கட்குத் தக்க முறையில் வேலை வாய்ப்பு வசதிகள் உருவாக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ளும். ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், கிராம இளைஞர் தொழிற் பயிற்சித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களிலுள்ள நிதி வசதிகள் இதற்குப் பயன்படுத்தப்படும்.

பட்டினிச்சாவு ஏற்படாமல் தடுக்கும் வகையில் திட்டமொன்றைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. ஏழை எளியவர், வகை ஏதுமின்றி பட்டினியால் மிகவும் வாடும் நிலை ஏற்பட்டால், அத்தகையோர் கிராம வளர்ச்சி அலுவலரிடம் சென்று தம் நிலையை எடுத்துக் கூறி 100 ரூபாய் உதவித் தொகை பெறலாம்; அத்தகையோர் வேலை வாய்ப்புறுதித் திட்டத்தின் கீழ் பணியாற்றுவர். வயது முதிர்ந்து ஓய்வூதியம் பெறத்தக்க நிலையில் உள்ளவர்களாக இருப்பின், ஓய்வூதியம் பெற்றுத் தருவதற்காக நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

## நலிந்தோர் நலன்

சமுதாயத்தில் சிறப்புக் கவனம் தேவைப்படுவோருக்காக உதவிகள் செய்யத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலக வங்கியின் உதவியுடன் சத்துணவுத் திட்டம் இவ்வாண்டு முதல் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் அங்கு உள்ள தாய்மாரில் ஒருவருக்கு அடிப்படை மருத்துவம், சத்துணவு பற்றிய பயிற்சி அளிக்கப்படும். அவர் பகுதி நேரச் சத்துணவு பணியாளராகப் பணிபுரிவார்; மொத்தம் இவ்வாறு சுமார் 9,000 பேர் பணிபுரிவார்கள். மேலும் 5,000 மக்கட் தொகைக்கு முழு நேர மக்கள் நலப் பெண் பணியாளர் ஒருவரும் பணிபுரிவார். ஆறு மாதம் முதல் 36 மாதம் வரையுள்ள இளம் சிறார்கள் உடல் நலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு அனைவருக்கும் தடுப்பு ஊசி போன்ற மருத்துவப் பாதுகாப்பும் தேவையுள்ள குழந்தைகளுக்கு சத்துணவும், அளிக்கப்படும். ஏழ்மை நிலையில் உள்ள கருவுற்ற மகளிருக்கு ஏழாம் மாதம் முதல் குழந்தை பிறந்த நான்கு மாதம் முடியும் வரை சத்துணவு வழங்கப்படும். மாதந்தோறும் அவர்கள் உடல் நலம் பரிசோதிக்கப்பட்டு தக்க அடிப்படை மருந்துகளும் வழங்கப்படும். மகளிர் ஒவ்வொருவருக்கும் இவ்விரண்டு வசதிகளுக்குமாக 150 ரூபாய்க்குக் குறையாமல் செலவிடப்படும். முன்னோடித் திட்டமாக முதலில் மதுரை மாவட்டத்திலுள்ள கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுத்தப்பட்டு, படிப்படியாக, சத்துணவு நிலை குறைவாக உள்ள மதுரை, செங்கற்பட்டு, இராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை, வடஆர்க்காடு மாவட்டங்களுக்கு ஐந்தாண்டுகளில் விரிவாக்கப்படும். மாநிலத்தில் கிராமங்களில் உள்ள மக்கள் தொகையில் இந்த மாவட்டங்களில் 44 சதவீதம் பேர் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு இதற்கென 2·13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

கிராமங்களில் உள்ள மகளிர் நலன் கருதி கிராமங்களில் மகளிர்க்குத் தனியாக நவீன முறையில் கழிப்பிடங்கள் அமைக்கப்படும். தன்னிறைவுத் திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்களில் இந்தப் பணி தொடங்கப்பட்டு, மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்.

முதியோர், கைம்பெண்கள், உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை பெறுபவர்கள் எண்ணிக்கை வரம்பு, தேவையுள்ளோர் அனைவரும் பெறும் வகையில் படிப் படியாக உயர்த்தப்பட்டு வருகின்றது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 1977ஆம் ஆண்டு சூன் மாதம் 30ஆம் நாள் அன்று இத்தகைய உதவி பெறுவோர் தொகை மொத்தம் 81,204 ஆக இருந்தது. அது டிசம்பர் 1979-ல் 1,13,970 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

### விவசாயத் தொழிலாளருக்கு ஓய்வூதியம்

உதவி தேவைப்படுபவர்கள் பலருக்கும் பயன் கிட்டும் வகையில், முதியோர் உதவித் தொகை திட்டம் பற்றிய விதிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. ஆதரவற்ற கைம்பெண்கள் உதவித் தொகை பெறுவதற்கான வயது 45இலிருந்து 40-ஆக 1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் குறைக்கப்பட்டது. கண்ணொளியற்றோர் வயது எல்லை ஏதும் இன்றி உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவு சென்ற ஆண்டு சூலை முதல் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டம் தொடங்கப்பட்டபோது நிர்ணயிக்கப்பட்ட உதவித் தொகையான 20 ரூபாய் சென்ற ஆண்டு ஏப்ரல் முதல் 25 ரூபாயாக உயர்த்தப்பட்டது. சென்ற ஆண்டு சுதந்திர தினத்திலிருந்து ஆண்டுதோறும் இரு முறை ஆடைகள் அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டது. மேலும், 60 வயதுக்கு மேற்பட்டு, வேலை செய்ய இயலாத நிலையில் உள்ள, ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குப் பொருந்தும் முறையில் இத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.



### எளியோர்க்கு இலவச உணவு

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள ஏழைகளுக்கு இலவசமாக அரிசி வழங்கப்படும் என்னும் கொள்கையை நிறைவேற்றும் வகையில், முதியோர் உதவித்தொகை, கைம்பெண்கள் உதவித்தொகை, உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை, கண்ணொளி அற்றோர் உதவித்தொகை, விவசாயத் தொழிலாளர் உதவித் தொகை ஆகியவற்றைப் பெறுபவர்களுக்கு, வாரம் ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்க அரசு முடிவு செய்துள்ளது. தற்போதுள்ள உதவித்தொகை பெறுவோரின் எண்ணிக்கை, அரிசியின் விலை இவற்றின் அடிப்படையில் இதனைச் செயல்படுத்த ஆண்டொன்றுக்குச் சுமார் 1·25 கோடி ரூபாய் செலவு ஆகும். இதனைச் செயல்படுத்துவதன் மூலம் உதவித் தொகை பெறுவோர் உணவுப் பொருளாகவும், உடையாகவும், பணமாகவும் அரசின் உதவியைப் பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### தாழ்த்தப்பட்டோர் மேம்பாடு

பல்வேறு வளர்ச்சிப் பணிகளின் கீழ் செய்யப்படும் நிதி ஒதுக்கங்களைச் செலவிடும்போது தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் தத்தமக்கு உரிய பங்கினைப் பெறுவதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். இதற்கும் மேலாகச் சிறப்பாகத் திட்டங்களை மேற்கொள்வதற்காக 1979–80ஆம் ஆண்டின் வருவாய், மூலதனக் கணக்குகளில் திருத்த மதிப்பீடுகளில் தாழ்த்தப்பட்டோர்

நலனுக்காக 21·23 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது; இது 1980–81ஆம் ஆண்டில் 24·72 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகப் பல புதிய திட்டங்கள் இவ்வாண்டு செயல் படுத்தப்படும். தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளில் இணைப்புச் சாலை வசதி, பள்ளி வசதி, குடிநீர் வசதி, இடுகாட்டுக்குச் சாலை போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஒருங்கிணைந்த முறையில் அளிப்பதற்கு அரசு இந்த ஆண்டு 75 இலட்சம் ரூபாய் செலவு செய்ய முடிவு செய்துள்ளது. தாழ்த்தப்பட்டோர் துறை நடத்திவரும் பள்ளிகள் அனைத்திற்கும் தக்க கட்டிட வசதி, நூல் நிலைய வசதி போன்ற வசதிகளைச் செய்து தரும் புதிய திட்டம் ஒரு கோடி ரூபாய்ச் செலவில் இவ்வாண்டில் தொடங்கப்படும். மேலும், இவ்வாண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் தாழ்த்தப்பட்டோர் பள்ளி மாணவர் மாணவியர் தங்கும் விடுதிகளுக்காகக் கட்டிடங்கள் கட்ட 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்டோர் நலன் பற்றிய சிறப்பான இம்முயற்சிகள் தன்னிறைவுத் திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தச் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

## தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதி

கிராமங்களில் வீடு கட்டும் திட்டத்தின் கீழ், தாழ்த்தப்பட்டோர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறும் கடனுக்காக வட்டியை அவர்கள் சார்பில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மானியமாக அளிப்பதுடன் அவர்களில் வருமானம் குறைவாக உள்ள தாழ்த்தப்பட்டோர் வீடுகள் கட்டும்போது அரசு 600 ரூபாய் மானியமாகவும் தருகிறது. ஆயுள் காப்புறுதிக் கழகம் போன்ற நிறுவனங்களிடமிருந்து நிதி பெற்று, பரவலான முறையில், பெருமளவில் தாழ்த்தப்பட்டோர் தத்தமக்கு ஏற்ற இடங்களில் வீடு கட்டிக் கொள்ளுவதற்கு இத் திட்டம் வகை செய்கின்றது. 1978–79 ஆண்டின் பிற்பகுதியில் தொடங்கப்பட்ட இத் திட்டத்தின் கீழ் அந்தக் கூட்டுறவு ஆண்டில் 3,003 வீடுகள் தாழ்த்தப்பட்டோரால் கட்டப்பட்டன. 1979-80-ஆம் கூட்டுறவு ஆண்டில் 16,000 வீடுகளை தாழ்த்தப்பட்டோர் இத் திட்டத்தின் கீழ் கட்டியுள்ளார்கள். தற்போது தரப்படும் மானியத்தின் அளவை 600 ரூபாயிலிருந்து, ஆயிரம் ரூபாயாக உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் இத்திட்டத்தின் கீழ் அதிக அளவில் தாழ்த்தப்பட்டோர் பயன் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1980–81 கூட்டுறவு ஆண்டில் தாழ்த்தப்பட்டோர் 30,000 குடியிருப்புகள் கட்டுவதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டுள்ளது.



இந்த ஆண்டு கூடுதலாக 15 பள்ளி மாணவ மாணவியர்க்கான விடுதிகள் திறக்கப்படும். தாழ்த்தப்பட்டோர் பல்வேறு தொழில்களைத் தொடங்குவதற்குத் தேவையான நிதி உதவி அளிப்பதற்காகத் தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்குக் கூடுதலாக மூலதனம் வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாகத் தாழ்த்தப்பட்டோர் தொடங்கும் தொழில்

களுக்கும் வேலை வாய்ப்பு முயற்சிகளுக்கும் தேவையான நிதிப் பங்கை (margin money) பல்வேறு நிதி நிறுவனங்கள், வணிக வங்கிகள் ஆகியவற்றிற்குத் தாழ்த்தப்பட்டோர் சார்பில் இந்தக் கழகம் அளிக்கும். இதனால், தாழ்த்தப்பட்டோர் தொழில் முயற்சிகளுக்கு மிகப் பெரிய அளவில் நிதி நிறுவனங்கள் உதவி கிடைக்க வகை ஏற்படும். மத்திய அரசு அண்மையில் அறிவித்துள்ள தாழ்த்தப்பட்டோருக்கான சிறப்பு நிதி ஒதுக்கத்தில் தமிழ்நாட்டிற்கு உரிய பங்கினைப் பெறவும், பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

### பிற்படுத்தப்பட்டோர் நலன்

பிற்படுத்தப்பட்டோர் நலனை மேம்படச் செய்வதற்காகக் கல்விக்கூடங்கள், வேலை வாய்ப்பு வசதிகள் இவற்றில், அரசு, 50 சதவீத இட ஒதுக்கீடு செய்தது மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிந்த ஒன்றாகும். வரும் ஆண்டில், புதிதாக 34 மாணவ, மாணவியர் விடுதிகள் திறக்கப்படும். முன்னாள் குற்றப் பட்டியலில் இருந்தோர் (De-notified Tribes) நலனுக்காக, இரண்டு மாணவர் விடுதிகள் புதிதாகத் திறக்கப்படும். இந்தத் துறைக்கு இந்த ஆண்டு மொத்தம் 761 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது.

### பெரியார், அண்ணா நினைவுச் சின்னங்கள்

சென்ற ஆண்டு பெரியார் நூற்றாண்டு விழாவைத் தமிழக அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பாகக் கொண்டாடியதை மன்ற உறுப்பினர்கள் நன்கறிவார்கள். பகுத்தறிவு அடிப்படையில் மக்கள் அனைவரும் சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்று காலமெல்லாம் மொழிந்துவந்த பெரியார் அவர்களுக்கு நினைவுச் சின்னமாக பெரியார் அறிவியல் அருங் காட்சி அகம் ஒன்றைச் சென்னையில் அமைக்கும் பணி தொடங்கப்பட்டுவிட்டது. மேலும், பெரியார் நினைவு அரங்கமொன்றைக் கட்டுவதற்கும் அரசு முடிவு செய்துள்ளது. ஒரே நேரத்தில் பல மொழிகளில் மொழி பெயர்க்கும் வசதிகளுடன் சிறப்பான மாநாடுகள், கூட்டங்கள் கூட்டுவதற்கு ஏற்ற முறையில் இந்த அரங்கம் அமைக்கப்படும். காஞ்சீபுரத்தில் அறிஞர் அண்ணா வாழ்ந்த வீட்டை அரசு விலைக்கு வாங்கி உள்ளது; அதனை அவர் நினைவுச் சின்னமாகப் போற்றி பாதுகாக்கவும் முடிவு செய்துள்ளது.

### கலைத்துறை மேம்பாடு

சென்னையிலுள்ள அருங் காட்சியகத்தை அடுத்துள்ள கலைக் கூடத்தை விரிவுபடுத்த 1·65 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வள்ளுவர் கோட்டத்தைச் சுற்றியுள்ள பகுதி அழகுபடுத்தத்தக்க வசதிகளுடன் மேம்படுத்தப்படும். திரைப்படத் தொழிற் பயிற்சி நிறுவனம் தக்கக் கருவிகளைப் பெறுவதற்கு ரூபாய் 4 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கம் இந்த ஆண்டில் செய்யப்பட்டுள்ளது. மேலும், அடுத்தாண்டில் வண்ணத் திரைப்படங்களை பதப்படுத்துவதற்காக (processing) ஒரு ஆய்வுக் கூடம் 12·65 இலட்சம் ரூபாயில் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திரையரங்குகள் அமைக்கக் கடனுதவி அளிக்கும் பணியை விரிவுப்படுத்து வதற்காகத் தமிழ்நாடு திரையரங்கு நிறுவனத்துக்கு அரசு இந்த ஆண்டு 20 இலட்சம் ரூபாய் கடனுதவி அளிக்கும்.

### அலுவலர் நலன்

தனது அலுவலர் நலன் குறித்து அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றது. சென்ற ஆண்டு எடுக்கப்பட்ட முடிவின் பயனாக அலுவலர்கள்

வீடு கட்டும் கடன்கள் சென்னையில் வழங்கப்படுவதற்குப் பதிலாக மாவட்ட தலைநகர்களிலேயே வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதனால் சென்னை நகர் மட்டுமன்றி மற்ற பகுதிகளிலும் வீடுகட்டும் பணி எளிதாக்கப்பட்டது. இதற்கென சென்ற ஆண்டு செய்யப்பட்ட நிதி ஒதுக்கமான 207 இலட்ச ரூபாயை உயர்த்தி 332 இலட்சமாக அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. காவலர் குடியிருப்புகள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கமும் திருத்த மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட 125 இலட்ச ரூபாயை விட ஒரு கோடி ரூபாய் கூடுதலாக, 225 இலட்ச ரூபாயாக அமைக்கப்பட்டுள்ளது. மற்ற அரசு அலுவலர்கள் குடியிருப்பதற்கான வீடுகள் கட்டுவதற்கு 250 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஆண்டுத் திட்டம்

1979–80 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 342·88 கோடி ரூபாய்க்கான ஆண்டுத் திட்டத்திற்கு வகை செய்யப்பட்டது. திருத்த மதிப்பீடுகளின் அடிப்படையில் 1979–80 ஆண்டுத் திட்டம் 347·41 கோடி ரூபாய் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு எதிராக, 1980–81 ஆம் ஆண்டு 436·37 கோடி ரூபாய் செலவில் திட்டம் செயல்படுத்த வரவு-செலவுத் திட்டம் வகை செய்கிறது. இவ்வாண்டும் மின் சக்தித் துறையே ஆண்டுத் திட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. மின் சாரத்துக்கு 155·76 கோடி ரூபாயும், பாசனத்துக்கு 32·74 கோடி ரூபாயும், வேளாண்மைக்கும் பிற சார்ந்த துறைகளுக்கும் 78·25 கோடி ரூபாயும், தொழில் துறைக்கு 23·22 கோடி ரூபாயும், சாலைகள், சாலைப் போக்குவரத்துக்கு 37·84 கோடி ரூபாயும், கல்விக்கு 20·73 கோடி ரூபாயும், மருத்துவத்துக்கு 12·28 கோடி ரூபாயும், குடிநீர் வசதி, கழிவு நீர் அகற்றலுக்கு 33·36 கோடி ரூபாயும், வீட்டு வசதி, நகர்ப்புற மேம்பாட்டுக்கு 23·68 கோடி ரூபாயும், ஏனைய துறைகளுக்கு 18·51 கோடி ரூபாயும் ஆண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன.

## அரசின் நிர்வாக அலுவலகங்கள்

அரசின் நிர்வாக அலுவலகங்களைப் பரவலாகத் திறக்க வேண்டியதன் அடிப்படையில், இவ்வாண்டு புதிதாக 15 துணை பதிவாளர் அலுவலகங்களும் 4 இடங்களில் கிளைக் கருவூலங்களும் திறக்கப்படும். வளர்ந்து வரும் மக்கட் தொகையையும், உருவாகியுள்ள புதிய குடியிருப்புகளையும் கருத்தில்கொண்டு, புதிதாக 10 காவல் நிலையங்கள் திறக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மக்களுக்கு விரைந்து நீதி கிட்ட உதவும் வண்ணம் 11 புதிய நீதி மன்றங்கள் அமைக்கவும் வரவு-செலவுத் திட்டம் வகை செய்கின்றது. திட்டத்திற்கு அப்பால் செய்யப்படும் செலவுகளாக இருப்பினும், மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு இவ்வாறு வசதிகளை விரிவுபடுத்த நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு உள்ளதை மன்ற உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என நம்புகிறேன்.

## வரி விதிப்பில் மாற்றங்கள்


பற்பல பண்டங்களின் மீது விதிக்கப்படும் பல முனை விற்பனை வரியை, ஒரு முனை விற்பனை வரியாக மாற்ற வேண்டுமென்பது, வணிகர்களால் நெடு நாட்களாக எழுப்பப்பட்டு வரும் கோரிக்கையாகும். இதனை ஏற்று, பூட்டு, சீப்பு, எழுது பொருட்கள், பேனா வகைகள், பிளாஸ்டிக் பொருட்கள், துத்தநாக முலாமிட்ட இரும்பு வாளிகள், பெருங்காயம், சூடம், மெழுகுவத்தி, நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றின் மீது தற்போது விதிக்கப்பட்டுள்ள, 4 சதவீத பல முனை விற்பனை வரி, ஒரு முனை விற்பனை

வரியாக மாற்றப்படும். இப்பொருட்கள் பொது மக்கள் வாங்கும் கட்டத்துக்கு முன்பாக, ஒரு முறை யேனும் விற்பனை இருந்து வருவதால், ஒரு முனை விற்பனை வரி 8 சதவீதமாக இருக்கும். இந்த மாற்றம், நாளை முதல் அமலுக்கு வரும்.

வணிகர்கள் கணக்கு வைத்திருக்கும் சிரமங் களைத் தவிர்க்கும் முறையில், சொற்ப அளவில் வரி வருவாய் தந்து வருகின்ற, குடிசைத் தொழில்கள் உற்பத்தி செய்யும் எலுமிச்சைப் புல் எண்ணெய், லாரெல் எண்ணெய், எளியவர் பயன்படுத்தும் அரிக்கன் விளக்கு, காற்றழுத்தம் செய்யப்படாத மண்ணெண்ணெய் அடுப்பு (Non-pressure kerosene stove) ஆகியவற்றின் மீதுள்ள விற்பனை வரி அறவே விலக்கப் படும். இதுவும் நாளை முதல் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் செய்யப்படும் சைக்கிள்கள், வெளி மாநிலங்களுக்கு விற்பனையாவதில் உள்ள சிரமங்களைக் குறைப்பதற்காகச் சைக்கிள்கள் மீதான வெளி மாநில விற்பனை வரியை 4 சத வீதத்திலிருந்து ஒரு சத வீதமாக, அரசு சென்ற ஆண்டு குறைத்தது. இதையொட்டி, சைக்கிள் உறுப்புகள் வெளி மாநிலங் களுக்கு விற்கப்படுகையில் அவற்றின் மீதான விற்பனை வரி, தற்போதுள்ள 4 சத வீதத்திலிருந்து ஒரு சத வீதமாக நாளை முதல் குறைக்கப்படும்.

ஏழை எளியவர் வாகனமான சைக்கிள்கள் மீதான வரியை 6 சத வீதத்திலிருந்து, பாதியாக்கி 3 சத வீதமாக வசூலிக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்த முடிவும் நாளை முதல் செயல்படுத்தப்படும். ஏழை எளியவர்கட்கும், வணிகப் பெருமக்களுக்கும் பலனளிக்கும் இந்த வரிக் குறைப்பு, வரி விலக்கு யோசனைகளை அனைவரும் வரவேற்பர் என நம்பு கிறேன். இந்த முடிவுகளினால் ஏற்படும் மொத்த இழப்பு ஆண்டொன்றுக்கு ரூ. 1·6 கோடி ரூபாயாக




இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

வணிகர் நலன் பற்றி ஆராய்ந்து, தக்க பரிந்துரைகளை அரசுக்குத் தருவதற்காக வணிகர் நலக் குழு ஒன்றை அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

**வரவு-செலவு மதிப்பீடுகள்**

1979–80ஆம் ஆண்டின் வரவு-செலவுத்திட்ட மதிப்பீட்டின்படி வருவாய்க் கணக்கில் மொத்த வருவாய் 849·83 கோடி ரூபாயாகவும், செலவுகள் 849·25 கோடி ரூபாயாகவும் நிகர உபரி 58 இலட்சம் ரூபாயாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டது. தற்போதுள்ள திருத்த மதிப்பீடுகளின்படி வருவாய் 9,24·06 கோடி ரூபாயாகவும், செலவுகள் 8,84·44 கோடி ரூபாயாகவும் இருக்குமென மதிப்பிடப்பட் டுள்ளது. விலை வாசிகள் உயர்வின் காரணமாக விற்பனை வரியில் ஏற்பட்ட கூடுதலான வருவாயும், போக்குவரத்து நிறுவனங்களிலிருந்து கிடைத்த கூடு தலான வாகன வரியும், கேளிக்கை வரி, முத்திரைத்தாள் வரி உயர்வும் வருவாய் உயர்வுக்கு காரணங்களாகும். கூடுதல் செலவினங்களில் இயற்கைச் சீற்றத்தின் விளைவான சேதங்களைச் சீர் செய்யும் பணி களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை முக்கியமான தாகும். வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மூலதன

கணக்கில் 72·25 கோடி ரூபாய் செலவிற்கும் கடன் கணக்குகளில் 79·94 கோடி ரூபாய் நிகர செலவிற்கும் வகை செய்யப்பட்டது. திருத்த மதிப்பீடுகளில் மூலதனச் செலவு 70·06 கோடி ரூபாயாகவும் கடன் கணக்கில் நிகரச் செலவு 1,20·82 கோடி ரூபாயாகவும் இருக்குமென கணக்கிடப்பட்டுள்ளது. கூட்டுறவு நிறுவனங்களில் கடன் நிலுவை நிலை மோசம் அடைந்த போதிலும், சரியாகக் கடன் திருப்பியவர்களுக்கு மேலும் கடன் வழங்குவதற்காகவும் அரசு அளித்த சலுகைகளைச் செயல்படுத்துவதற்காகவும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு 43·5 கோடி ரூபாய் சிறப்பு உதவி செய்ய திருத்த மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. 1979—80 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, ஆண்டு இறுதியில் எல்லாக் கணக்குகளுமாகப் பார்க்கும் போது, செலவுகள் வரவை விட 4·25 கோடி ரூபாய் கூடுதலாக,



இருக்கும் என கணிக்கப்பட்டது. திருத்த மதிப்பீடுகளின்படி, இது 59 இலட்சமாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி இறுதிக் கையிருப்பு 234 இலட்சம் ரூபாய் அதிகப் பற்றில் முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

1980—81ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், வரி மாற்றங்களைக் கணக்கில் எடுத்த பின், வருவாய் 9,82·66 கோடி ரூபாயாகவும் செலவுகள் 9,67·27 கோடி ரூபாயாகவும் வருவாய்க் கணக்கில் நிகர உபரி 15·39 கோடி ரூபாயாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. உறுதியான வேலை வாய்ப்புத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கத்தை கூடுதலாக்கி மொத்தம் 10 கோடி ரூபாய் அளித்துள்ளது, தன்னிறைவுத் திட்டத்திற்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது, மற்றும் பல புதிய திட்டங்கள் செயல்படுத்துவதற்காக ஒதுக்கீடுகள் செய்தது ஆகியவை 1979—80ஆம் ஆண்டின் வருவாய் உபரியை விட 1980—81ஆம் ஆண்டு வருவாய் உபரி குறைவாக இருப்பதற்கு முக்கிய காரணங்களாகும். 1980—81ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீடுகளில் மூலதனச் செலவு 94·21 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. தாழ்த்தப்பட்டோர் மாணவ, மாணவியருக்கு விடுதிகள் கட்டுவதற்கும், பள்ளிகள் கட்டுவதற்கும், உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தும் சத்துணவுத் திட்டத்திற்காகக் கட்டிடங்களுக்கும், நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் பங்கு மூலதனத்திற்கும் பல்வேறு நீர்ப்பாசன திட்டங்களுக்கும் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஒதுக்கீடுகள் மூலதனச் செலவுகள் உயர்ந்ததற்கு காரணங்களாகும். கடன் கணக்கில் நிகரச் செலவு 76·33 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. எல்லாக் கணக்குகளுமாக ஆண்டின் வரவு-செலவுகள் அனைத்தும் சேர்த்துப் பார்க்கும் போது, இறுதியில் உபரி 33 இலட்சம் இருக்கும் என்றும், இதன் விளைவாக இறுதிக் கையிருப்பு 201 அதிகப் பற்றாகக் குறைந்து நிற்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது.

### மத்திய திட்ட நிதி உதவி

1980—81 முதல் ஐந்து ஆண்டுகளுக்கான புதியதொரு ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கவேண்டும் என மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. மாநில அரசும் தனது ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் ஐந்தாண்டுத்

திட்டங்கள் அமைக்கப்படும்போது தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் மத்திய அரசின் உதவி மிகக் குறைவான நிலையில் இருந்து வந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மத்திய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் வழங்கும் திட்ட நிதி உதவியில் தமிழ்நாட்டின் பங்கு முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து குறைந்துகொண்டே வருவதை கீழ்க்காணும் அட்டவணையில் இருந்து அறியலாம் :—

| | மத்திய அரசு அனைத்து மாநில அரசுகளுக்கும் வழங்கும் திட்ட நிதி உதவியில் தமிழ் நாட்டின் பங்கு. (சதவீதத்தில்) |
|---|---|
| முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் (1951–56) .. .. .. | 10·8 |
| இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956–61) .. .. .. | 9·0 |
| மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961–66) .. .. ... | 7·4 |
| ஆண்டுத் திட்டங்கள் (1966–69) .. | 6·8 |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (1969–74) .. .. .. | 5·5 |
| ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் (1974–78) .. .. .. | 4·1 |

மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு வழங்கும் திட்ட நிதி உதவி குறைந்து கொண்டே வருவதன் காரணமாக தமிழ்நாட்டின் நபர்வாரி திட்டச் செலவும் (Per Capita Plan Outlay) குறைந்து வருவதை கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம் :—

நபர்வாரி திட்டச் செலவு.

| | தமிழ்நாடு. | இந்தியா முழுவதும். | அனைத்து மாநிலங்களில் (22) தமிழ்நாட்டின் நிலை. |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | |
| நான்காவது ஐந்தாண்டுத் திட்டச் செலவுகள் (1969–74). | 114 | 133 | 17 |
| ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டச் செலவுகள் (1974–78). | 272 | 345 | 19 |

இந்த நிலை மாறி புதியதாக உருவாக்கவிருக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு மத்திய அரசு தருகின்ற உதவிக்கு கணிசமான உயர்வு காணுவதன் மூலம் தமிழ்நாடு அகில இந்திய சராசரி நபர்வாரி திட்ட அளவையாவது எட்டுவதற்கு ஏற்றதோர் திட்டத்தை அமைப்பதற்கு மத்திய அரசு உதவி செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக அரசின் நிதிநிலையை மன்றத்திடம் தெளிவுபெற விளக்கிக் காட்டியுள்ளேன், சமத்துவம்—சமதர்மம்—சனநாயகம் எல்லா வகை



> மக்கள் தரும் வரிப்பணம் சரியான வழியில் மக்களுக்குப் பயன்படவேண்டும். மக்களை ஏமாற்றி, அதற்கு அதிகாரிகள் உடந்தையாய் இருந்து, திட்டங்களைப் பாழாக்குவது எங்கள் நோக்கமல்ல. நாங்கள் அதைப் பின்பற்றத் தயாரில்லை.
>
> இந்த அரசு தனித் தன்மை கொண்டு செயல்படுகிறது. அந்த இலட்சியத்தைத் திட்டமாக்கி, சமதர்ம சமத்துவத் திட்டத்தை அமரர் அண்ணாவின் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றியே தீரும். அண்ணா காட்டிய பாதையிலிருந்து வழுவமாட்டோம்!
>
> —மாண்புமிகு முதல்வர்
>
> **எம். ஜி. ஆர்.**

களிலும் வெல்ல வேண்டும்! தமிழர் எல்லா வழி களிலும் ஏற்றமும் எழிலும் பெறவேண்டும்! தமிழ்நாடு எல்லாத் துறைகளிலும் வளமும் வலிவும் பெறவேண்டும்! இவற்றின் மூலம் இந்தியா எல்லா நிலைகளிலும் வெற்றியும் பொலிவும் பெறவேண்டும்!

இந்த வரவு-செலவுத் திட்டத்தையொட்டி மன்ற உறுப்பினர்கள் வழங்கும் கருத்துக்கள், தரும் விளக்கங்கள், கூறும் அறிவுரைகள், சுட்டிக் காட்டும் திட்டங்கள் ஆகியவை இந்த அரசு தன் கடமை ஆற்றப் பெருந் துணையாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன். மன்ற உறுப்பினர்கள் அனைவ ருடைய ஒத்துழைப்பையும் கோருகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள்,

''நல்ல ஆட்சி என்றால் எப்படி இருக்க வேண்டும்? நல்ல விளக்குக்கு வெளிச்சம் எப்படியோ நல்ல வயலுக்கு விளைச்சல் எப்படியோ அப்படித்தான் நல்ல ஆட்சியில் மக்களுக்கு மன அமைதி வேண்டும்'' என்று குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட நல்ல மன அமைதி மக்களுக்கு ஏற்பட வேண்டும் என்பதற் காகத்தான் இந்த ஆட்சி, திட்டங்கள் பலவற்றையும் தீட்டியிருக்கிறது.

மிகக் குறுகிய காலத்தில் இந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்க எனக்கு உதவியும், ஒத்துழைப்பும் நல்கிய நிதித் துறைச் செயலாளர் திரு. க. வேங்கடேசன் அவர்களுக்கும் அவருடன் பணியாற்றிய அலுவலாளர்களுக்கும் என் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*1980–81*ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை ஏற்குமாறு அவையினரை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம்!







Grant. 61. TM

## தாவர உணவுச் சத்துக்கள் சிலேடேட் வடிவில் அடங்கியிருப்பதனுல் எக்ரோமின் பயிர் விளேச்சலேச் சிக்கனமான முறையில் 20% அல்லது அதற்கு மேலும் உயர்த்துகிறது.

இந்தியாவின் முதல் தாவர உணவு இலேத் தெளிப்பான எக்ரோமின் பயிர் விளேச்சலின் தரத்தையும் அளவையும் மேம்படுத்துகிறது. ஈரப்படுத்தவும், பரப்ப உதவும் ஊக்கி கிரகிப்புத் தன்மையை மேலும் அதிகரிக்கிறது. மற்ற தண்ணீர்த் தெளிப்பு எக்ரோ கெமிக்கல்களுடன் எக்ரோமினே உபயோகிக்கலாம்

எக்ரோமின் சிலேட் செய்யப்பட்டுள்ளது. சிலேஷன், நியூட்ரியன்டுகள் படிப்படியாக முழுவதும் கிரகிக்கப்படுவதையும் சிறந்த மகசூலேயும் உறுதி செய்கிறது.



**நிரூபணம் இதோ:**
''பருத்தி... எக்ரோமின் மூலம் விளேச்சல் 20% அதிகரித்தது.''– மணிலாணி பாமுலேயா எட்டக்குராபோடு, சதினபள்ளி தாலுக்கா, குண்டூர் ஜில்லா, ஆந்திரப் பிரதேசம்.

அதிகப்படி விவரங்களுக்கு இந்த முகவரிக்கு எழுதவும்:
**ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் ப்ரை. லிட்.**
தபால் பெட்டி எண் 9417, பம்பாய் 400 093

எல்லாப் பயிர்களுக்கும் பயன்படும் தாவர உணவு இலேத் தெளிப்பான் எக்ரோமின் 10 கிலோ கொண்ட பைகளிலும் கிடைக்கிறது.

கிளே : 227–227–1 பொள்ளாச்சி ரோடு, கோயம்புத்தூர்–641 021

# 1980-81 நிதி நிலை அறிக்கை

* புது வரிகள் இல்லை.

* உபரி பட்ஜெட்.

* 16 கோடி ரூபாய் தக்காவிக் கடன்கள் இரத்து.

* 42 கோடி ரூபாய் சிறு விவசாயிகள் கூட்டுறவுக் கடன்கள் இரத்து.

* சைக்கிள்கள் மீதான வரி 6 சதத்திலிருந்து 3 சதமாகக் குறைக்கப் படுகிறது.

* அரிக்கன் விளக்கு, மண்ணெண்ணெய் அடுப்பு மீதான விற்பனை வரி அறவே இரத்து.

* பல பொருட்கள் மீதான வரி பலமுனையிலிருந்து ஒருமுனை வரியாக மாற்றம்.

* 983 கோடி ரூபாய் வருவாய் வரவுகள்.

* 436 கோடி ரூபாய்க்கான ஆண்டுத் திட்டம்.

* மின் உற்பத்திக்கு முதலிடம்-ஆண்டுத் திட்டத்தில் 155.76 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

* உணவு உற்பத்தியை 84 இலட்சம் டன்னிலிருந்து 89.20 இலட்சம் டன்னாக உயர்த்த முயற்சிகள்.

* பெரியார் மாவட்டத்தில் தாராபுரத்தில் புதிதாக ஒரு விவசாயப் பயிற்சிப் பள்ளி நிறுவ முடிவு.

* தென்னை வளர்ப்புக்கான சிறப்பு முயற்சிகள்.

* உழவு மாடுகள் காப்புறுதித் திட்டம் ஆய்வில்.

* சுவீடன் நாட்டு உதவியுடன் காடு வளர்ப்புத் திட்டம்.

* மீனவர் குடியிருப்புகளுக்கு 5 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வசதி.

* பாசனத் திட்டங்களுக்காக 32.74 கோடி ரூபாய்.

* தொழிலில் பின்தங்கிய பகுதிகளுக்கான மத்திய நிதி உதவியைப் பெறுவதில் முதலிடம்.

* பட்டுப்பூச்சி வளர்ப்புக்கென 265 இலட்சம்.

* தீப்பெட்டி மரக்குச்சி தயாரிக்க கூட்டுறவுத் துறையில் மூன்று ஆலைகள்.

* பேருந்து செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை அரசு மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கம் ரூபாய் 6 கோடியிலிருந்து ரூபாய் 10 கோடியாக உயர்வு.

* 1,500 மக்கள் தொகை கொண்ட இடங்களுக்கு இணைப்புச் சாலைகள் தர நிதி ஒதுக்கம் ரூபாய் 3 கோடியிலிருந்து இரட்டிப்பாக்கி ரூபாய் 6 கோடி.

* வரும் ஆண்டில் மொத்தம் 1,800 புதிய பேருந்துகள்.

* மாமல்லபுரத்தில் பயணிகள் வசதிக்காக இந்த ஆண்டு 12 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

* கூடுதலாக 150 பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயரும்.

# சிறப்புக் கூறுபாடுகள்

* புதிதாக 2,800 ஆசிரியர் பதவிகள்.

* கிராமப் பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டும் சிறப்புத் திட்டம்: ரூ. 5.5 கோடி நிதி ஒதுக்கம்.

* மூன்று புதிய பாலிடெக்னிக்குகள்.

* மருத்துவ வசதிகள் விரிவு ; குழந்தைகள் நோய்த் தடுப்புச் சிறப்பு முயற்சிகள்.

* குடிநீர் வடிகால் வாரியத்துக்கு ரூ. 6.83 கோடி அரசு நிதி ஒதுக்கம்.

* கிராம வீட்டுவசதித் திட்டம்-ஒன்றரை ஆண்டுகளில் 22,000 வீடுகள் கட்டப்பட்டன. இவ்வாண்டு இதற்காக இரண்டு கோடி ரூபாய் அரசு அளிக்கும்.

* கிராம வீடுகட்டும் திட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் வீடு கட்டும்போது, மானியம் ரூ. 600-லிருந்து ரூபாய் ஆயிரம் ஆக உயர்வு; வரும் ஆண்டில் புதிதாக 30,000 வீடுகள்.

* வேலைக்கு உணவு-வேலை வாய்ப்புறுதித் திட்டப் பணிகள் விரிவுபடுத்தப் படும்-ஒரு இலட்சம் டன் உணவு; ரூ.10 கோடி சிறப்பு நிதி ஒதுக்கம்.

* கிராமப்புறங்களில் உள்ள 16,200 இளைஞர்கட்குத் தொழிற் பயிற்சி.

* பட்டினிச் சாவு தடுப்புத் திட்டம். பட்டினியால் வாடுவோர்க்கு ரூ. 100 உதவித் தொகை.

* குழந்தைகள், தாய்மார் நலன், சத்துணவு, மருந்துகள் அரசு வழங்கும் திட்டம்.

* கிராமங்களில் மகளிருக்குத் தனி கழிப்பிடங்கள் கட்டும் திட்டம்.

* ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்க்கு ஓய்வு ஊதியம்

* ஏழை எளியோர்க்கு இலவச உணவு. வாரம் ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கல்.

* தாழ்த்தப்பட்டோர் நலனுக்காகச் சிறப்புத் திட்டங்கள்.

* பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர் விடுதிகள் புதிதாக 34 திறக்கப்படும்.


* அலுவலர், காவலர் வீட்டு வசதிப் பெருக்கம்—அலுவலர் வீட்டுக்கான கடன் நிதி ஒதுக்கம் ரூ. 207 இலட்சத்திலிருந்து ரூ. 332 இலட்சமாக உயர்வு.

* 15 துணைப்பதிவாளர் அலுவலகங்கள்.

* 11 புதிய நீதிமன்றங்கள்.

* 10 புதிய காவல் நிலையங்கள்.

* 4 புதிய கிளைக் கருவூலங்கள்.



# பட்ஜெட்



## பொருளாதார நிபுணர் டாக்டர் பா. நடராஜன்

சமுதாயத்தில் அடித்தட்டிலுள்ள நலிந்தோர்க்கு நலன் செய்வதைப் பெரு இலட்சியமாகக்கொண்டுள்ளது இந்த பட்ஜெட். இதை இதனுடைய சிறப்பு அம்சமாக நான் கருதுகிறேன்.

எளியோர்க்கு இலவச உணவு, விவசாயத் தொழிலாளர்க்கு ஓய்வு ஊதியம், தாழ்த்தப் பட்டோர் மேம்பாடு, அவர்களுக்கு வீட்டு வசதி, பிற்படுத்தப்பட்டோர் நலன் ஆகிய திட்டங்களெல்லாம் விரிவும், புதுமையும் பெற்றுள்ளன.

தாய்மார்களுக்குச் சத்துணவுத் திட்டம், சமூகப் பாதுகாப்பின்பால், மேனாடுகளில் மேற்கொள்ளும் முறையில் இங்கும் மேற்கொள்ளப்படுகிறது.

**கிராமங்களில் மகளிர் நலன் கருதி, நவீன முறையில் கழிப்பிடம் அமைக்கும் திட்டம், தமிழருடைய நாகரிக, பழக்க வழக்கத்துக்கு ஒரு புதுமை என்று சொல்லலாம்.**

முதியோர், கைம்பெண்கள், உடல் ஊனமுற்றோர் ஆகியவர்களுக்கு அளிக்கும் உதவித் தொகை கணிசமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

குடிநீர் வசதி, அரசின் முக்கிய கவனத்தைத் தருகிறது. இதற்காக 45 கோடி ரூபாய் செலவாகும் ஒரு பெரிய திட்டம் பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ளது.

கிராமத் தொழில்கள் உற்பத்திக்குப் புது வேகம் கொடுக்கப்பட்டுள்ளது.

கிராம இளைஞர்களுக்குத் தொழில் பயிற்சி அளிக்கும் திட்டம் விரிவுபடுத்தப் படுகிறது. இதைப் போலவே, வேலைக்கு உணவு என்ற திட்டமும் உறுதியும், விரிவும் பெறுகிறது.

பட்டினிச் சாவு ஏற்படாமல் தடுக்கும் வகையில் ஒரு திட்டம் உருவாகியுள்ளது. நூறு ரூபாய் வரையில் கிராம வளர்ச்சி அலுவலர் மூலம் ஏழைஎளியவர்களுக்கு உதவித் தொகை அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

விவசாயத் தொழிலாளர்களுக்கு ஓய்வு ஊதியம், எளியோர்க்கு இலவச உணவு இவையெல்லாம், ஏழைகள் நலனைக் கருதி வகுக்கப்பட்ட புதுமையான திட்டங்கள்.

**அடிப்படையாக, விவசாயத்துக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் 60 கோடி ரூபாய் கடன் நிவாரணம் செய்யப்பட்டிருப்பது பட்ஜெட் வரலாற்றிலேயே புதுமையும், தைரியமும் கொண்ட ஒரு நடவடிக்கையாகும். இதனால், விவசாயம் செழித்து, உற்பத்தி பெருகி, வளர்ச்சி ஓங்கி, பண வீக்கத்தை மட்டுப்படுத்தும் வாய்ப்பு பிறக்கும்.**

சுருக்கமாகச் சொன்னால் இது ஒரு புரட்சி பட்ஜெட்!

பேட்டி: ஏ. கி. ஸ்ரீ

# குறித்தும்



## எஸ். மகாதேவன்

**பிளாஸ்டிக், நைலான் பொருட்கள் தயாரிக்கும் 'நைலோபிளாஸ்ட்' நிறுவனப் பொறுப்பாளரான இவர் குறிப்பிட்டதாவது:**

பிளாஸ்டிக் பொருட்களுக்கு ஒருமுனை விற்பனை வரி என்று தமிழக அரசு நேரடியாகக் குறிப்பிட்டிருப்பது புரட்சிகரமானது.

அதில் என்போன்ற சிறு தொழில் அதிபர்களுக்கு ஒரே ஒரு சிறுகுறை. எல்லா பிளாஸ்டிக் பொருட்களுக்குமா, அல்லது குறிப்பிட்ட பொருட்களுக்கு மட்டுமா? அப்படியானால் என்னென்ன என்றும் குறிப்பிடப் பட்டிருக்குமானால் எங்களுக்கெல்லாம் இன்னும் உபயோகமாக இருந்திருக்கும்.

ஒருமுனை விற்பனை வரி என்கிறபோது பொருட்களின் விலை ஓரளவுக்கு ஏறத்தான் செய்யும். அயல் நாடுகளிலிருந்து வருகிற மூலப்பொருட்களின் விலையேற்றம் பட்ஜெட்டோடு தொடர்பில்லாதது. அங்கே அதன் விலை ஏறும்போது, அதற்குத் தகுந்தபடி பிளாஸ்டிக் பொருட்களின் விலையை நாங்களே தக்கபடி- பட்ஜெட் வரை காத்திராமல் ஏற்றிவிற்பதும் உண்டு. **ஆகவே, பட்ஜெட் காரணமாக விலை கூடும் என்றால் அதில் ஒன்றும் குறை இல்லை.**

இப்போதெல்லாம் பிளாஸ்டிக் பொருட்கள், ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் இன்றியமையாதவைகளாகிவிட்டன. ஆகவே ஒருமுனை விற்பனை வரி என்ப

தால் மக்கள் பெரிதாக ஒன்றும் பாதிக்கப்பட்டுவிடமாட்டார்கள்.

80 தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதில் ஓரளவுக்கு பிளாஸ்டிக் தொழிற்சாலைகளும் அடங்கியிருக்குமானால் என் போன்ற சிறுதொழில் அதிபர்களுக்கெல்லாம் மகிழ்ச்சிகரமாக இருக்கும். அரசின் வருமானமும் கூடும்.

இந்த பட்ஜெட், சிறிய, பெரிய தொழில்களின் வளர்ச்சியில் அரசுக்குள்ள அக்கறையைக் காட்டுவதாக இருக்கிறது.

சிறுதொழில் தொடங்குவதில் உள்ள விதிமுறைகள் இன்னும் தளர்த்தப்பட வேண்டியது அவசியம் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



## ஜி. இராதாகிருட்டிணன்,

**பல்லவன் போக்குவரத்துக் கழக (மெட்ரோ) தலைமைச் செயலக முதுநிலை உதவியாளரான இவர் தெரிவித்ததாவது:**

1800 புதிய பேருந்துகள் விடப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பேருந்துகளே தொடாத பல கிராமங்கள் இதன் மூலம் பல்வேறு நகரங்களோடு இணைப்பை நேரடியாக உண்டாக்கிக் கொள்ளும் என்பதை நாம் அறியலாம்.

உதாரணமாக- சென்னையிலிருந்து குளத்தூருக்கு நேரடியாக பெருநகர்ப் பேருந்து (மெட்ரோ) இல்லை. இது போல் பல கிராமங்களுக்கு இன்னும் நேரடி இணைப்பு ஏற்படாமல் இருக்கிறது.

இதனால் பல சங்கடங்கள் உண்டு.

குளத்தூரில் உள்ள விவசாயி சென்னைக்கு வந்து தம் உற்பத்திப் பொருள்களை விற்கவோ, விவசாயத்திற்கான பொருட்களை வாங்கவோ அங்கே பஸ் ஏறி, நேராக - எளிதாக சென்னைக்கு வந்து இறங்கிவிட முடியாது. இரண்டுபஸ் மாறித்தான் வந்தாக வேண்டும். சாதாரணமாக வந்து போவதென்றாலும் இந்தச் சங்கடம்தான்.

இப்போது வண்டிகள் அதிக அளவில் விடப்பட இருப்பதால் அப்படிப்பட்ட தொல்லைகள் நீக்கப்படுவது நிச்சயம் என்று நம்பலாம்.

இது மட்டுமல்ல- 1800 புதிய பேருந்துகள் விடப்படுகிறது என்றாலே, டிரைவர்கள், கண்டக்டர்கள், டைம் கீப்பர்கள், செக்கர்கள் ஒர்க் ஷாப்புகளின் எண்ணிக்கையும் அதிகமாக்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டு. இதனால் இந்த அரசு மூலம் பல்லாயிரக்கணக்கானோர் புதிதாக வேலை வாய்ப்புப் பெறுவார்கள் என்பது உறுதி.

இப்போது பேருந்துகளின் எண்ணிக்கை உயர்த்தப்படுவதால் அரசின் வருவாய் அளவு இன்னும் அதிகமாகும். ஆகவே, நாங்களெல்லாம்—வாரிவழங்கும் பாரிவள்ளல் எனப் புகழ் பெற்ற மாண்புமிகு முதல்வரின் கீழுள்ள இந்த அரசின் போக்குவரத்துத் துறை நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறபோது எங்கள் கோரிக்கைகள் எல்லாம்நிவர்த்தியாகும் என்று நிறைய எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

## திருமதி எஸ். முத்தம்மாள்

**எம்.ஜி.ஆர். நகரிலுள்ள அறிஞர் அண்ணா மாநகராட்சிப் பள்ளியில் ஆசிரியை பணியாற்றும் இவர் தெரிவித்ததாவது:**

சட்டமன்றத்தில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் 2800 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று தெரிவிக்



கப்பட்டிருக்கிறது. என்னோடு ஆசிரியைப் பயிற்சி பெற்ற பல பேர் வேலையில்லாமல் இருப்பதை அறிந்த எனக்கு இச் செய்தி மிகவும் மகிழ்ச்சியூட்டுவதாக இருந்தது.

அரசு இதை விரைந்து செயல்படுத்த வேண்டும்.

அப்படி அதிக ஆசிரியர்கள் வேலைக்குப் போடப்படுகிறபோது அதிக இடங்களைப் பள்ளிகளில் ஒதுக்க முடியும். நிறையப் பேர் படிக்கவும் வாய்ப்பேற்படும்

பெரியார் மாவட்டத்திலுள்ள தாராபுரத்தில் விவசாயப் பயிற்சி பள்ளி திறக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாவட்டந்தோறும் அப்படிப்பட்ட பள்ளிகள் அமைக்கப்பட்டால், அந்தத் துறையில் பட்டம் பெற்ற ஆசிரியர்கள் அதிகம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கச் செய்ய முடியும்.

அரிசன நலத் துறை நடத்துகிற பள்ளிக் கூடங்களுக்கெல்லாம் சரியான கட்டடம் நூல் நிலையம் போன்றவைகளை அமைக்க ஒரு கோடி ரூபாயில் திட்டம் - தாழ்த்தப்பட்ட சமுதாய மாணவ, மாணவிகளுக்கு விடுதிகள் கட்ட இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கீடு என்றெல்லாம் நிதிநிலைஅறிக்கையில் கூறப்பட்டிருப்பது அந்தச் சமுதாயத்தினர் ஆக்கம் பெறவும் ஊக்கம் பெறவும் இந்த அரசு மேற்கொள்ளும் புனிதமான நல்ல முயற்சிக்கு உதாரணங்களாகும்.

## கே. சுப்பையா

**சென்னை, ஆயிரம்விளக்கு மார்க்கெட்டில் மளிகைக் கடை வைத்திருக்கும் இவர் தெரிவித்த கருத்தாவது:**

நான் தனிப்பட மளிகைக் கடை வெச்சிருக்கேன்னாலும், சில வியாபாரிங்களாட்டமா கொள்ளை லாபமே குறிக்கோளா வியாபாரம் செய்யறதில்லைங்க.

# பத்துப் பேர்



நான் வெச்சிருக்கிறது தனிக் கடைன்னாலும் கூட சிவில் சப்ளைஸ் கடைங்க மூலமா, முக்கியமான பொருட்களெல்லாம் மக்களுக்குக் கிடைக்கிறாப்ல வியாபாரம் செய்யறதுக்காவ கூடக் குறைய ஏழு கோடி ரூபா ஒதுக்கியிருக்கிறதா பட்ஜெட்ல சொல்லியிருக்கிறதைப் பார்த்து மகிழ்ச்சியடைஞ்சேன்.

அப்படியெல்லாம் பண்ணினா தான் கொள்ளை லாபம் அடிக்கிற வியாபாரிங்களை அடக்கி ஒடுக்க முடியும். என்னாட்டம் வியாபாரிங்களோட குறைங்களெல்லாம் அரசாங்கத்துக்கு எட்றதே இல்லேன்னு ஒரு குறை இருந்தது. அதையெல்லாம் கேட்டு ஆராய்ஞ்சி, அரசாங்கத்துக்குத் தெரிவிக்கிறதுக்காகவே வணிகர் நலக்குழு ஒண்ணு அமைக்கப்படும்னு பட்ஜெட்ல இருக்கு.

புதுசா ஒரு வரிகூடப் போடாமெ நம்ம அரசாங்கம் இந்த பட்ஜெட்டைத் தயாரிச்சிருக்கிறதெ நாடே பாராட்டுதுங்க.

உணவு உற்பத்தியை 90 லட்சம் டன்னுக்கு உயர்த்தப்போறதாவும், எண்ணெய்ங்க உற்பத்தியைப் பெருக்கப் போறதாவும் தெரிவிக்கிறது ரொம்பவும் நல்ல ஏற்பாடுங்க.



## செல்லம்மாள்

**பூ வியாபாரம் செய்யும் இவர் கூறியதாவது:**

இந்த வருஷத்லே செய்யப்போற திட்டங்களுக்கான வரவு செலவு என்னான்னு சட்டசபையில் தெரிவிச்சாங்களாம். பேப்பர்ல வந்த அந்த விஷயத்தை ஒரு புள்ளயாண்டான் படிச்சிக் காட்டினான்.

சொந்த பந்தம் எதுவுமில்லாமெ சோத்துக்குக் கஷ்டப்படற ஏழை எளியதுங்களுக்கு வாராவாரம் ஒவ்வொரு கிலோ அரிசி தரப்போறதாவும், அதுக்காகவே ஒண்ணேகால் கோடி ரூபா ஒதுக்கிருக்கிறதாகவும் அதுல சொல்லிருக்காங்களே, அது ஒண்ணு மட்டும் எம் மனசுலே அப்படியே நின்னுபோச்சுங்க.

ஏன்னா, அந்த வகேல என்னோட சொந்தக்காரங்களே ரொம்ப ரொம்பக் கஷ்டப்பட்டுக்கிட்டிருக்கிறது எனக்குத் தெரியும். இந்த பூ வியாபாரத்துல வர்ற வருமானத்தெ வெச்சி அவுங்களுக்கு முடிஞ்சவரை ஒதவி வர்றேனுங்க.

இனிமே அரசாங்கமே அதைச் செய்யப்போவுதுன்னா அதெவிட ஒசந்த விஷயம் வேற என்னங்க இருக்க முடியும்? அதுக்காகவே புரட்சித் தலைவரை பூஜை பண்ணிக் கும்பிடலாமுங்களே!

## ஆர். குப்புசாமி

**சென்னை, இராயப்பேட்டை பகுதியில், பொதுப் பணியில் பெரும் ஈடுபாடு கொண்டிருப்பவரான இவர், அரசின் நிதிநிலை அறிக்கையைப் பற்றிக் கூறியதாவது :**

போன எலக்‌ஷன்ல தாலியைப் பத்தின பிரச்னையைப் பெரிசா பேசினாங்க. அதுக்கும் இந்த பட்ஜெட்ல நம்ம முதல்வர் வழி வகை பண்ணிட்டார். பொற்கொல்லர் கூட்டுறவுச் சங்கம் அமைச்சி, அதன் மூலம் மலிவு விலைல தாலி பண்ணித் தரப்படும்னு பட்ஜெட்ல சொல்லிருக்காங்க.

அப்ப இந்தப் பிரச்னையைப் பெரிசு பண்ணினவங்க, இப்ப இதுக்கு நன்றி சொல்லறதுதான் அரசியல் நாகரீகம்.

நிறையத் தொழிற்சாலைங்க வரும்னு பட்ஜெட் சொல்லுது. இதனால், வேலையில்லாத் திண்டாட்டம் தமிழ்நாட்டை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமா போயிடும்; சீக்கிரமாகவே தொழில் துறையில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க பெருமையையும் அடைஞ்சிடும்.



தொழிற்சாலைங்க நிறைய ஆனா, அதுக்கேத்த மின்சார சப்ளை வேணும். அதுக்காக மட்டும் பட்ஜெட்ல கிட்டத்தட்ட 156 கோடி ரூபா ஒதுக்கிருக்கிறது பெரிய காரியம். கடல்லேருந்து மின்சாரம் உற்பத்தி பண்ணவும் மத்திய அரசுகிட்ட சம்மதம் கேட்டிருக்காங்க.

சிறு விவசாயிங்களோட கடனை ரத்து பண்ணினது, விவசாயிங்களுக்குப் பென்ஷன், ஏழைகளுக்கு இலவச அரிசி வழங்கறது, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முறையான பல திட்டங்களை அறிவிச்சிருக்கிறது -- இதெல்லாம் முதல்வரோட அரசின் புரட்சிகரமான நிதிநிலை அறிக்கையோட முக்கியமான அம்சங்களாகும்.

அறநிலையத் துறையோட மேன்மைக்கும், உணவு உற்பத்திப் பெருக்கத்துக்கும், மீனவங்களுக்கெல்லாம் பலவிதமான நன்மைகளைச் செய்யறதுக்காகவும், கிராமப்புற வளர்ச்சி, மருத்துவப் பணி, கைத்தறித்தொழில் மேம்பாடு ஆகிய வைங்களுக்காகவும், கல்வி வளர்ச்சிக்காகவும், நகர்ப்புறச் சீரமைப்புக்காகவும்னு பட்ஜெட்ல பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கு. இந்த அரசு ஒளிமயமான எதிர்காலத்தைச் சீக்கிரமாகவே காணப்போவுதுங்கிறதுக்கு இதெல்லாம் நல்ல அறிகுறிகளாகும்.

தந்தை பெரியாருக்கு நினைவுச் சின்னம் அமைக்கிறது, அமரர் அண்ணா வீட்டை அரசே வாங்கறது பத்தியெல்லாம் கூட திட்டம் சொல்லியிருக்காங்க. அதுவே இந்த அரசுக்கு அவங்க மேல இருக்கிற மரியாதையைக் காட்டுறதா இருக்கு.

ஏழை எளியவங்க வாகனமான சைக்கிள்ள 'டபுள்ஸ்' போகப் பெருந்தன்மையோட முன்பு அறிவிச்ச முதல்வர் அவர்கள் -- இந்த பட்ஜெட்ல, சைக்கிள் மீதான வரியை ஆறு சதவீதத்துலேருந்து சரிபாதியா குறைச்சி மூணு சதவீதம்னு அறிவிச்சிருக்கிறது ஒரு அருமையான காரியம்.



## திருமதி என். அமராவதி

**காய்கறி வியாபாரம் செய்து வரும் இவர் தெரிவித்ததாவது:**

எங்க ஊட்ல வெறகு 'கரி மூல மாக அடுப்பெரிச்சுதான் சமைப் போமுங்க. 'கட்டையோ கரியோ கிடைக்கிறது போன மழை காலத் துல தட்டுப்பாடா போனதுலே ருந்து ஸ்டவ்வுதாங்க. அப்புறம் என்னடான்னா கிருஷ்ணால் (மண்ணெண்ணெய்) விலை ஏறீட் டுது. இந்த நெலமை சீராயி வர்ற சமயத்துல கிருஷ்ணால் வெளக்கு, ஸ்டவ்வு அடுப்புங்க ளுக்கு இனிமே வரி இல்லேன்னு அரசாங்கம் சொல்லீருக்காமே!

அதுலே நாங்கள்லாம் ரொம்ப வும் சந்தோஷப்பட்டோம்.

பூட்டு, சீப்பு, பெருங்காயம் வெலெயெல்லாத்தையும் கூட அரசாங்கம் கட்டுப்படுத்திட்டதா சொன்னாங்க. எங்களாட்டம் ஏழைபாழைங்களுக்கு இதாட்டம் தித்திக்கிற சேதி வேற என் னாங்க இருக்க முடியும்?

காய்கறி வெலயெல்லாம் ஏறீட் டதா ஜனங்ககுறைபட்டுக்கறாங்க வெவசாயத்துக்கான சாமான்க வெல ஏர்றப்ப, அவங்க உற்பத்தி பண்ற பொருளுங்களோட வெலை யும் ஏத்தித்தான் எங்களுக்குத் தர்றாங்க. வாங்குறதற்குத் தவுந்தாப்பலதானேங்க நாங்க விக்க முடியும்?

ஆனா இனிமே தன்னால எல் லாத்தோட வெலைங்களும் எறங் கிடும். ஏன்னா, வெவசாயிங்க கடன்ல ஏகப்பட்டதை இந்த அரசாங்கம் தள்ளுபடி பண்ணீருக் காமே? ஆகையால, வெவசாயிங்க மன நிம்மதியோட மத்த வேலை க்ளைக் கவனிப்பாங்க இல்லிங்க களா? அதாலெ சொல்றேன்!

## ப. ஜனார்த்தனம்

**ஜெயின் கல்லூரியில் பி. ஏ. இரண்டாமாண்டு படித்துக் கொண் டிருக்கும் இவர் கூறியதாவது:**

எழுது பொருட்கள், பேனா வகைகள், நோட்டுப் புத்தகங்கள் ஆகியவற்றின்மீது விதிக்கப்பட்டி ருந்த நாலு சதவிகித பல முனை விற்பனை வரி ஒரு முனை விற் பனை வரியாக மாற்றப்படும் என்று நிதி நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது என் னைப் போன்ற மாணவ மாணவி களுக்கெல்லாம் மகிழ்ச்சி தருவ தாக இருக்கிறது.

கல்லூரிகளில் பிற்படுத்தப் பட்ட சமுதாயத்தினருக்கு 51 சதவீத இட ஒதுக்கீடு செய்து



போட்டோ: ராஜு

அரசு அறிவித்திருப்பதை சாதா ரண குடும்பத்தைச் சேர்ந்தவர் களெல்லாம் பெருமகிழ்ச்சியோடு வரவேற்கவே செய்கிறார்கள்.

கல்லூரிகளில் இடம் கிடைக்க வில்லை; அதனால் படிக்கவில்லை

கல்லூரிகளில் இடம் கிடைக்க வில்லை; அதனால் படிக்கவில்லை என்கிற நிலைமை இதனால் நாள டைவில் நீங்கி, சாமான்யர்களுக் கெல்லாம் கல்விக் கண்திறப்பதில் இந்த அரசு கொண்டுள்ள குறிக் கோள் சீக்கிரமே பெரும் வெற்றி பெறும்.

மேல்தட்டு, கீழ்த்தட்டு என்கிற சமுதாய வித்தியாசம் பார்க்கா மல் எல்லோருக்கும் நல்லது நடக்கும் விதத்தில் இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட் டிருப்பது மற்ற மாநில அரசு களுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்குவதாகும் என்பதில் கொஞ்சமும் சந்தேகமே இல்லை.

பாலிடெக்னிக்குகளில் கூடுதல் இடங்கள் உண்டாக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். எதிர்காலத் தமிழகத்தில்தொழில் நுணுக்க மேதைகள் பலர் உருவாக இது வழி வகுக்கும்.

## சர்ச்சிலின் பதில்

**பாராளுமன்றத்தில் உறுப்பின ராயிருந்த ஒரு பெண்மணி, வின்ஸ்டன் சர்ச்சிலை நோக்கி, "நீங்கள் மட்டும் என் கணவராய் இருந்தால், உங்களுக்கு நான் விஷம் கொடுத்திருப்பேன்!" என்று ஆத்திரத்தோடு கூறி னார்.**

**சர்ச்சில் பதட்டமடையாமல், "அம்மணி, நீங்கள் மட்டும் என் மனைவியாய் இருந்தால், அந்த விஷத்தை, உடனே வாங்கி மகிழ்ச்சியோடு குடித்திருப் பேன்!" என்று பதில் கூறினார்.**

## திரு ம. அமல்தாசன்

**சென்னைக்கு அருகில் போரூ ரிலுள்ள டபிள்யூ. எஸ். இன்சு லேட்டர்ஸ் இந்தியா லிமிடெட் என்னும் நிறுவனத்தில் பணியாற் றும் இவர் சொன்னதாவது:**

தமிழக அரசு சமர்ப்பித்துள்ள பட்ஜெட்டில் விவசாயிகளுக்கான கடன் 60 கோடி ரூபாய் தள்ளு படி செய்துள்ளதை மிகவும் வர வேற்கின்றோம். விவசாயிகளுக் கான கடன் முழுவதையும் தள்ளு படி செய்வதென்பது சாத்திய மற்ற ஒன்றாகும். நாட்டின் பொருளாதாரத்தைப் பார்க்கும் போது செய்ய இயலாத ஒன் றாகும்.

தமிழக அரசு பட்ஜெட் முழுக்க முழுக்க பாமர மக்க ளின் நலனை முன்னோக்கி அமைந்திருப்பதால், மகிழ்ச்சி யோடு வரவேற்கக் கூடிய சிறப் பான பட்ஜெட்டாக அமைந்துள் ளது. சைக்கிளுக்கு விற்பனை வரியைக் குறைத்திருப்பது, தமி ழகத்தில் தொழில் முன்னேற்ற மடைய ஒரு வாய்ப்பாக அமையு மென நான் கருதுகிறேன்.

**பின்பக்க அட்டையில்...**

நன்செய் வளம்பெறவே
நல்லுதவி செய்துவரும்
அன்னை காவிரியும்—
கரிகாலன்
அமைத்த கல்லணையும்.

# இன்றைய சேமிப்பு நாளைய மகிழ்ச்சி

## வளமான நல்வாழ்வுக்கு வழிகாட்டும் சிறப்புமிக்க திட்டம்

# சிறு சேமிப்புத் திட்டம்

## தற்போது அஞ்சலக சேமிப்புகளுக்கு அதிக வட்டி அளிக்கப்படுகிறது

சிறு சேமிப்பு தரும் சீரிய திட்டங்களில் இரண்டு:

* வளரும் மாத சேமிப்புத் திட்டம் * தொடர் வைப்புத் திட்டம்

| | மாதம் செலுத்தும் தொகை | 5ஆம் ஆண்டு இறுதியில் கிடைப்பது | 10ஆம் ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|---|
| வளரும் மாத சேமிப்புத் திட்டம் | ரூ. 5—00 | 389—05 | |
| (Recurring Deposit) | ரூ. 10—00 | ரூ. 778—10 | |
| தொடர் வைப்புத் திட்டம் | ரூ. 10—00 | | ரூ. 1693—20 |
| (Cumulative Time Deposit) | ரூ. 20—00 | | ரூ. 3386—40 |

**சலுகை :** (1) தற்போது வளரும் மாத சேமிப்புத் திட்டத்தின் கீழ் கணக்கு துவங்கியவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுகளுக்குக் கிடைக்கும். இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்த சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை. சம்பளப் பட்டியல் மூலம் இத்திட்டத்தில் சேரலாம்.

(2) அஞ்சலக தொடர் வைப்புத் திட்டத்தின் மூலம் சேமிப்பவர்கள் செலுத்தும் தொகைக்கு வரிச் சலுகை உண்டு. இத்திட்டத்திலும் சம்பளப் பட்டியல் மூலம் சேரலாம்.

உங்கள் குழந்தைகளின் சீர்மிகு வாழ்விற்காகவும், நாடும், வீடும் வளம் பெறவும், "இன்றே ஒரு சேமிப்புக் கணக்குத் துவங்குங்கள்".

*விவரங்களுக்கு :*

இயக்குநர்,
சிறு சேமிப்புத் துறை,
சென்னை-600 002.

மண்டல தேசிய சேமிப்பு இயக்குநர்,
சென்னை-600 002.

ஆணையர், சென்னை மாநகராட்சி,
மற்றும் எல்லா
மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
உங்களுக்கு அருகாமையிலுள்ள
அஞ்சல் அலுவலகம்.

# மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர், துணைத் தலைவர் வாழ்க்கைக் குறிப்புகள்



## திரு க. இராசாராம்

திரு க. இராசாராம் அவர்கள், சேலம் மாவட்டம் ஆத்தூரில் 1926 ஆகஸ்ட் 26ல் பிறந்தார்.

சேலம் நகராட்சிக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர், திராவிடர் கழகத்தில், பணியாற்றியிருக்கிறார்.

சேலத்தில் நடைபெற்ற மாநில திராவிடர் கழக மாநாடு மற்றும் 1952-53ல் ஈரோட்டில் நடைபெற்ற புத்தமதப் பிரச்சார மாநாடு ஆகியவற்றின் செயலாளராகப் பணியாற்றினார்.

தி.மு.கழகத்தின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராக இருந்த இவர், சேலம் நகராட்சிக் கல்லூரி, 1952ல் மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலை லிமிடெட் ஆகியவற்றின் தலைவராகப்பணியாற்றினார்.

1959-64 வரை, சென்னையில் தமிழ்நாடு டாக்சி-ஆட்டோ டிரைவர்கள் சங்கத்தின் தலைவராகப் பணிபுரிந்த இவர், 1962-67, 67-71-ல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். 1971 முதல் 1975 முடிய தமிழக அமைச்சரவையில் தொழிலாளர் நலம், சுற்றுலா ஆகிய துறை அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்தார். 1978-79ஆம் ஆண்டில் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதியாக புதுடில்லியில் பொறுப்பேற்றிருந்தார்.

சென்னை சட்டக் கல்லூரி சமூக சேவைக் கழகத்தின் உறுப்பினரான இவர், இச்சங்கத்தின் பிரதிநிதி என்ற முறையில், இலங்கையில் பல சமூக சேவை நிலையங்களுக்குச் சென்று வந்துள்ளார்.

இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர், தென்வியட்நாம், ஹாங்காங், ஜப்பான், பார்மோசா ஆகிய நாடுகளுக்கும் இங்கிலாந்து, பாரீஸ், ரோம் ஆகிய நகரங்களுக்கும் இவர் சென்று வந்துள்ளார். ரோமாபுரிக்குச் சென்றிருந்தபோது, போப் அவர்களைச் சந்தித்திருக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது, தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த, அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தைக் கூட்டி, திருச்சிக்கும், தூத்துக்குடிக்கும் இடையே அகல ரயில்பாதை அமைக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதித்தார்.

டில்லியில் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்த இவர், சேலம் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராக இருந்து வருகிறார்.

'திருவிளக்கு' என்னும் வார ஏட்டைப் பல்லாண்டுக் காலம் நடத்தி வந்திருக்கும் இவர், சிறந்த நூலாசிரியர்.

1980ல் நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலில், பனைமரத்துப்பட்டித் தொகுதியில் போட்டியிட்டுவெற்றிபெற்ற இவர், 21.6.80 அன்று சட்டப் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

முன்பக்க அட்டையில்...

நிதிநிலை அறிக்கை

வெளியிடும் முன்னர்

மாண்புமிகு முதல்வரும்

மாண்புமிகு நிதி அமைச்சரும்.



## திரு பி. எச். பாண்டியன்

தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு பி.எச். பாண்டியன் அவர்கள் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த சேரன்மகாதேவியில் 29-3-45-ல் பிறந்தார்.

பாளையங்கோட்டையில் உள்ள புனித ஜான் உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வியை முடித்த இவர், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பட்டப் படிப்பைத் தொடர்ந்து, பிறகு, சென்னை சட்டக் கல்லூரியில் பயின்று வழக்கறிஞர் ஆனார்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் சட்ட மருத்துவமும் குற்ற இயலும் பயின்று முதுகலைப் பட்டம் பெற்றிருக்கிறார். கடந்த 12ஆண்டுகளாக சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞராக இருந்து வருகிறார். இவர் 'தமிழ்நாடு பார் கவுன்சில்' உறுப்பினராக இருந்து வருகிறார்.

அ.இ.அ.தி.மு.க. தொடங்கப்பட்டதிலிருந்து அதன் மாநில வழக்கறிஞர் குழு அமைப்பாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

இவர் துணைவியார் திருமதி சிந்தியா பாண்டியன் அவர்கள் பேராசிரியராக சென்னைப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்து வருகிறார். இவருக்கு மூன்று மகன்களும் ஒரு மகனும் உள்ளனர்.

இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் - சேரன்மாதேவியில் இருந்து தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



# தியாகத்தின் உறைவிடம்

தோற்றம்: 15-7-1903 மறைவு: 2-10-1975

அரசியலில் தீர்க்க தரிசனமும், தெளிந்த கண்ணோட்டமும் கொண்டுள்ள காமராசர் மற்றவர்களது முயற்சி எதுவுமின்றித் தமது சுயபலத்திலேயே பல பெறற்கரிய வெற்றிகளைப் பெற்றுத் தரும் திறன் படைத்தவராக விளங்குகிறார்.

நேருஜிக்குப்பின் அவரது திறமைகள் நன்கு பிரகாசித்து வருவது அனைவரும் அறிந்தது.

—டாக்டர் இராதாகிருஷ்ணன்.

திரு. காமராஜ் தோற்றத்தில் மட்டுமின்றி மதிநுட்பத்திலும், மக்களையும் அவர்களுடைய பிரச்சினைகளையும் புரிந்து கொள்வதிலும் அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதிலும் தாட்டிகம் மிகுந்த தலைவராக விளங்குகிறார்.

— பிரதமர் இந்திராகாந்தி.

திரு. காமராஜ் தமிழ்நாடு ஆட்சித் தலைவராக, முதன் மந்திரியாக வந்தவுடன் அந்த ஆண்டே "இந்தியாவின் ஆட்சிப்போக்கு இனிமேல் சமதர்மம்தான்" என்று சொல்லக்கூடிய நிலை ஏற்பட்டது என்று சொல்ல வேண்டும்.

—தந்தை பெரியார்.

காமராஜர், கல்லூரியில் படிக்கவில்லையே தவிர வாழ்க்கைப் பாடத்தைப் படித்தார். மக்களின் புன்னகையை - பெருமூச்சை - கண்ணீரைப் படித்துப் பாடம் பெற்றார்! முப்பது வருடம், நாற்பது வருடம் என்று மக்களிடம் தொண்டாற்றினால்தான் இந்தப் பாடத்தைப் பெறமுடியும்!

—பேரறிஞர் அண்ணா.

தியாகத்தின் அடையாளம் காமராஜர். போராடிப் போராடி வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டுக்கொண்டு தன்னை உயர்த்திக் காட்டியவர் காமராஜர். மக்களுக்காகத்தான் சட்டமே ஒழிய, சட்டத்துக்காக மக்கள் அல்ல என்பதைச் செயலில் காட்டியவர்.

—மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர்.

"ஆளுகை செய்ய மனதானால் ஊழியஞ் செய்" என்பதைத் தம் செய்கையால் செய்து காட்டி மக்கட்கு உணர்த்தியவர் தொண்டர் காமராஜர்!

உழைப்பால் உயர்ந்து, நேர்மையில் திகழ்ந்து, திறமையில் சிறந்து விளங்குபவர் காமராஜர்.

—திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்.

பல சந்தர்ப்பங்களில் அவர் காட்டிய அமைதி அவருக்கு வெற்றியையே விளைவித்திருக்கிறது. அவ்வெற்றியெல்லாம் அறத்தின் வெற்றி; தமிழ்நாட்டின் வெற்றி என்றும் கொள்ளலாம்.

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

# முத்துப் பல் முறுவலிக்க...

பேராசிரியர் ஜெ. ஜி. கண்ணப்பன்
அரசு பல் மருத்துவமனை
சென்னை.

வளர்ந்து வரும் நாடுகளில் தமிழகம் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. விஞ்ஞான ரீதியிலும், அறிவியல் துறையிலும் அதிவேகமாக நம்நாடு முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்பது நமக்கு மிக்கப் பெருமையாகயுள்ளது.

மேலைநாடுகள் போல், 'இயந்திரச் சாதனங்கள் வாழ்க்கையின் தேவைகள்' (Mechanisation of Man's needs) நமது மக்களும் கையாளுகிறார்கள். இது, நமது மக்களும் முன்னேற்றம் அடைந்து வருகிறார்களென்பதற்கான அறிகுறியாகும்.

இத்தகைய வழியில் பல் மருத்துவத்துறையும் சிறப்பாக விளங்குகிறது.

ஆதிகாலத்திலேயே, பற்களின் நலனைத் தமிழர்கள் அறிந்திருந்தார்கள். அதனால்தான், 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி' எனவும் 'பல் போனால் சொல் போச்சு' எனவும் வழக்கில் கூறி வந்தார்கள். இந்தப் பழமொழிகளில் மிக்க ஆழமான, அன்றாடத் தேவைக்கான பொருள் பொதிந்துள்ளது. பற்களின் நலன் பேணப் பெற்றால் உடல்நலம் உண்டு என்பதை அறிவுறுத்துகிறார்கள்.

நல்ல பற்கள் நம்மை நலமுடன் இருக்க உதவுகின்றன. உடலின் ஆரோக்கியம் செழுமையாகிறது. உடலின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் நல்ல பற்கள். ஒருவன் அல்லது ஒருத்தியின் அறிவுத் தன்மை வெளிப்பட-பேச்சுக்கும், பாட்டிற்கும் பற்கள் தேவைப் படுகின்றன. நல்ல மனப்பான்மை பள்ளியில் படிப்புத் திறமையை வெளிப்படுத்த நல்ல பற்கள் காரணமாகிறது என்பது ஆய்வாளர்கள் முடிவு.

பற்களின் நலம் பேணப்படாவிட்டால், பற்கள் நோயுறுமேயானால், உடல்நலம் பாதிக்கப் படுகிறது. உடலின் அவயவங்களான ஈரல், கல்லீரல், சிறுநீரகம், இருதயம் போன்றவை பழுதடைகின்றன. மேலும், மூளை பாதிக்கப்பட்டு இறப்பும் ஏற்படும். நன்றாக ஓடி ஆடி விளையாடும் ஆரோக்கியமான குழந்தைகள், பல் நோயினால் பாதிக்கப்பட்டு நிரந்தரமாக இருதயம் பழுதுபட்டு ஊனமுற்றவர்களாகிறார்கள். இது ஒரு பரித்தாபமன்றோ!

சீரண மண்டலத்தின் முதன்மையான பகுதியான வாயில் பற்கள் உள்ளன. இயற்கையளித்த ஒரு வினோதமான, அதிசயத்தக்க அளவில் ஏற்படுத்தப்பட்ட (Mechanism) நமது உடலுக்குத் தேவையான அளவில் திறம்பட உழைக்கிறது.

பற்கள் பேணிப் பாதுகாக்கப் படுவது மிகமிக முக்கியமாகும். இதற்கான முறைகள் மிகவும் இலகுவானவையே. சாதாரண முறையில் செயல்படும் முறைகள் உள்ளன.

பற்களின் தூய்மை மிகவும் இன்றியமையாதது. காலையிலும் மாலையிலும் பல் துலக்கிகள் மூலம் பல் துலக்க வேண்டும். சுற்றுமுறையில் துலக்குவது நல்லது. அதனால் பற்களுக்குத் தேய்வு ஏற்படாது. மேலும், இந்தச் சுற்று முறையில் பல் துலக்குவதால், ஈறுகளும் நலமுடன் உறுதியாக இருக்கும்.

வெண் சர்க்கரையாலான மிருதுவான உணவுப் பொருள்களைத் தவிர்ப்பது நல்லது. மிருதுவான உணவு, பற்களில் பல்லிடுக்குகளில் ஒட்டிக் கொள்ளுவதல்லாமல், வெண் சர்க்கரை முறிந்து, அமிலமாக மாறி பற்களைக் கரைத்துப் பற்சொத்தை என்ற நோயை உண்டாக்குகிறது. மேலும், வெண்சர்க்கரையினால் உடலுக்கு ஒருவித உபயோகமும் இல்லை. மாறாக அதனால் ஏற்படும் கெடுதல்களே அதிகம். ஆகையினால் வெண்சர்க்கரையைத் தவிர்த்தல் நலம்.

வெண்சர்க்கரைக்குப் பதில், நமது நாட்டில் கிடைக்கும் நாட்டுச் சர்க்கரை, வெல்லம் போன்றவைகளை நாம் பயன்படுத்தலாம். இவை, வெண்சர்க்கரையைப் போல ஊறு விளைவிப்பன அல்ல. மேலும், இவற்றில் உள்ள ஊட்டச்சத்து இரத்தத்திற்கு வேண்டிய இரும்புச் சத்து கொண்டதாக உள்ளன.

இயற்கையோடு அமைந்தஉண்ணும் முறைகளைக் கடைப்பிடித்தல் நலம். மென்று சாப்பிடக் கூடிய பச்சைக் காய்கறிகளையும் பழங்களையும், வேக வைக்காமல் சாப்பிடுதல் நல்லது. அதனால் பற்கள் தாமாகவே இயற்கையாகத் துலக்கப்படுகின்றன. கீரைகளும் பற்களுக்கு நல்லது. நமது நாட்டில் கிடைக்கக்கூடிய எண்ணற்ற காய்கறிகள், பழவகைகள், கீரைகளை மூடநம்பிக்கையினால் உண்ணாமல் தவிர்த்து விடுகிறோம். இயற்கையில் கிடைக்கும் இவ்வகைளைத் தவிர்ப்பது தவறு. அவைகளைத் தனிப்பட்ட முறையில், ஒவ்வாமையினால் தவிர்க்கலாமேயன்றி, அவற்றை உபயோகிப்பது பற்களுக்கும், நமது உடலுக்கும் நலம் பயக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.



சென்னை பல் மருத்துவக் கல்லூரியில் 21-6-80ல் நடைபெற்ற முதல் மருத்துவக் குழுமக் கூட்டத்தை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், திரு எச்.வி. ஹண்டே அவர்கள் துவக்கி வைத்தார்கள்.



புரதச்சத்து மற்றும் மாவுப் பதார்த்தத்தினைக் கொண்ட தானியவகை, பருப்பு வகைகள் நமக்கு வேண்டிய ஊட்டச்சத்தினையளிக்கின்றன. அவைகளை உட்கொள்ளுவதால், பற்கள் பல மடைகின்றன. அரிசி, கோதுமை சோளம், ராகி போன்றவைகளும் துவரம்பருப்பு, பாசிப்பருப்பு, பச்சைப்பயறு போன்ற பருப்பு வகைகள் நமது நாட்டில் அளவில்லாமல் கிடைக்கின்றன.

உணவு உட்கொண்ட பின், வாய் நிறைய நீர்கொண்டு கொப்பளித்து விழுங்குதல் நலம். அதனால் பற்கள் சுத்தமாகின்றன. சாப்பிட்ட பின் கடைசியாக, ஒரு பத்தை தேங்காயையோ, அல்லது ஒரு பச்சை கேரட்டையோ மென்று சாப்பிடுதல் நலம்.

பற்சிப்பியிலும், தந்துனியிலும் நரம்புகளும், இரத்தக் குழாய்களும் இல்லாத காரணத்தால் நோய் வாய்ப்படின், வலிதோன்றுவதில்லை. பற்கூழ் வரை நோய் பரவுமேயானால், பல்வலி, அழற்சியேற்படும். அதுபோது நோய் முற்றியதாக ஆகிறது. பற்களை எடுத்து மருத்துவம் செய்ய வேண்டிவரும். இப்படிப்பட்ட நிலையைத் தவிர்க்க ஆண்டிற்கு இருமுறை பற்களைப் பரிசோதனை செய்த பின் மருத்துவம் செய்து கொண்டால், நோய் வாய்ப்படாமல் பற்களைப் பாதுகாக்கலாம்.

தமிழகத்தில் கல்லூரியில் படித்த தேர்ச்சி பெற்ற சிறந்த பல் மருத்துவர்கள் உள்ளார்கள். சிறந்த முறையில் பணிபுரியும் பல் மருத்துவமனைகள் உள்ளன. தமிழகம் முழுவதிலும் மாவட்டங்களிலும் அரசு பல் மருத்துவ மனைகளை நிறுவியுள்ளதுமல்லாமல், சிறந்த மருத்துவர்களை நியமித்துள்ளது. ஆகையினால், பல்மருத்துவம் வேண்டும் மக்கள் நீண்ட தூரம்பயணம் கொள்ளாமல், அருகிலேயே மருத்துவம் பெற வசதியுள்ளது.

பற்களிலும், ஈறுகளிலும் ஏற்படும் நோய்களைத் தடுக்க முடியும். அவைகளைத் தடுப்பதற்கான விதிமுறைகளை மிக எளிதாகக் கடைப்பிடிக்க முடியும். ஆகையினால், கருத்தாக அந்த வழிமுறைகளைப் படைப்பிடித்தால், அதனால் முல்லைச் சிரிப்பிற்குரிய முத்துப் போன்ற மோகனப் பற்களைப் பேணிப் பாதுகாக்கலாம்.

நல்ல பற்கள் உடலுக்கும்தெளிவான உள்ளத்திற்கும் முகத்தின் தோற்றப் பொலிவிற்கும் மிக மிகத் தேவை என்பதை யாரே மறுக்க முடியும்!

## அரசு அலுவலர்களே

## உங்களுக்கு ஓர் இனிய செய்தி !

அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றுகின்ற அரசு அலுவலர்களாகிய நீங்கள். உங்கள் அலுவல்களின் காரணமாகப் பல்வேறு சூழ்நிலைகளில் பலதரப்பட்ட மக்களைச் சந்தித்திருக்கக்கூடும்; பல்வேறு நிகழ்ச்சிகளிலும் பங்கு பெற்றிருக்கக்கூடும். இவற்றிலிருந்து பல சுவையான சம்பவங்களையும், செய்திகளையும் உங்கள் அனுபவத்தில் கண்டும் கேட்டுமிருப்பீர்கள். இவற்றைத் தொகுத்து '*தமிழரசு*' இதழில் வெளியிடக் கருதுகிறோம்.

அவ்வாறு நீங்கள் கண்ட—கேட்ட

1. நகைச்சுவை சம்பவங்கள்
2. கருத்தாழமிக்க உரையாடல்கள்
3. சுவையான செய்திகள்

முதலானவற்றைச் சுருக்கமாக எழுதியனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வெளியிடத் தகுதியானவை தமிழரசில் இடம் பெறும்.

வெளியிடுவதற்கு அனுப்பப்படுகின்ற செய்திகள் அனைத்தும், உண்மையானவையாக இருத்தல் வேண்டும்; கற்பனை கூடாது. வேறு எந்த ஏடுகளிலோ, இதழ்களிலோ வெளிவராதவையாக இருக்க வேண்டும்,

அனுப்புபவர், தன்னுடைய முழு முகவரியையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

எழுத்தோவியங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

'ஆசிரியர்,<br>'தமிழரசு'<br>அரசினர் தோட்டம்,<br>சென்னை-600 002.

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

## (21.6.80 முதல் 5.7.80 முடிய)

### 21.6.80

ஈரோட்டில் ரூ. 1 கோடிச் செலவில், கால்நடை தீவனத் தயாரிப்புத் திட்டம் அடுத்த மாதத்தில் உற்பத்தி துவங்கும் என்றும், நாள்தோறும் அதில் 100 டன் கால்நடைத் தீவனம் உற்பத்தியாகும் என்றும் மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் கூறியுள்ளார்.

நீரிழிவு நோய்ச் சிகிச்சை முறை குறித்து மேல்பட்டப் படிப்பு வகுப்பு சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் விரைவில் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்று, சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் நீரிழிவு சிகிச்சை ஒரு வாரக் காலப் பயிற்சி வகுப்புகளைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் திரு எச். வி. ஹண்டே அவர்கள் கூறியுள்ளார்.

தமிழக அரசினால் ரூ. 135 கோடி செலவில் ஈரோடு அருகே பள்ளிப்பாளை யத்தில் நிறுவப்படவிருக்கும் காகிதத் தொழிற்சாலைக்கான வேலைகள் தீவிர மாக நடந்து வருகின்றன. இந்தத் தொழிற்சாலையில் 4 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிட்டும்.

### 27.6.80

மதுரை வைகை நதி வடக்குக் கரையி லுள்ள ஆழ்வார்புரத்தில் 20.6.80 அன்று தீ விபத்து ஏற்பட்டது. இத் தீ விபத்தில் குடிசைகளை இழந்த ஒவ் வொரு குடும்பத்திற்கும் 22 கிலோ அரிசியும், எரிந்துபோன குடிசைகளை மீண்டும் கட்டிக் கொள்ள ரூபாய் இரு நூறும் வழங்க அரசு ஆணையிட்டுள் ளது.

### 28.6.80

சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில், சென்னை மாநகருக்கு ஒளியேற்றும் சோடியம் விளக்குகள் மீனம்பாக்கம், அண்ணாசாலைப் பகுதி, ராஜ்பவன் பகுதி, கடற்கரைப் பகுதிகளில் புதி தாகப் பொருத்தப்படும் என்றும், வேலைக்கு உணவுத் திட்டம் மாநிலத் தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களி லும் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்றும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் செய்தியாளர்களிடம் தெரி வித்துள்ளார்.

தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்புத் துறையினால் தயாரித்துள்ள தந்தை பெரியார் ஒலி-ஒளிக் காட்சி தஞ்சாவூரில் மீண்டும் ஜூலை மாதம் 3-வது வாரத்தில் துவங்கப்பெற்று நடை பெறும்.

### 29.6.80

திரிபுரா மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கலவர நிலைமையின் காரணமாக, உதவி முகாம்களில் தங்கியுள்ள அகதி களுக்குத் தமிழக அரசின் சார்பில் முத லமைச்சர் பொது நிவாரண நிதியி லிருந்து ஒரு இலட்ச ரூபாய் மதிப்புள்ள கைத்தறிச் சேலைகள் அன்பளிப்பாக வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

### 30.6.80

விவசாயிகளுக்குப் பல்வேறு புதிய சலு கைகளை அளிக்கும் வகையில், விவசாயத் துறையில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவிபுரியுமாறு மத்திய அரசுக்குத் தமிழக அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

### 1.7.80

மதுரையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ்மாநாட்டையொட்டி, திருமலை நாயக்கர் மகாலில் ஒலி-ஒளி விசேடக் காட்சி நடத்த ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. இந்தக் கண்காட்சி தமிழ், ஆங் கிலம் ஆகிய இரு மொழிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது, தமிழ்நாட்டின் வரலாறு இந்த ஒலி-ஒளி காட்சியில் இடம் பெறும் என்று மாண்புமிகு செய்தி -அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் கூறியுள் ளார்.

## 2.7.80

சேலத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பில் எரிசாராயத் தொழிற்சாலையைத் தமிழக அரசு அமைக்கும் என்று மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## 3.7.80

உயிர் மீட்புப் பணிகள் உட்பட சிறப்புப் பணிகள் ஆற்றியவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் அண்ணா பதக்கம் பெறத் தகுதியுடையோரைத் தேர்ந்தெடுக்கக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## 4.7.80

ஓட்டல் பலகாரங்களின் விலைகளைக் குறைக்க, தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. விலையைக் குறைக்க ஓட்டல் அதிபர்கள் முன்வராவிட்டால், விலைக் கட்டுப்பாடு விதித்து அரசு சட்டம் கொண்டு வரும் என்று மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இப்போது நாள்தோறும் 2 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்குப் பால் வழங்கப்பட்டு வருகிறது. இந்த எண்ணிக்கையை 3 இலட்சமாக உயர்த்தத் திட்டமிட்டு வருவதாக மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் மின்வெட்டு மேலும் தளர்த்தப்படுகிறது. பருவமழை நல்ல நிலையில் இருப்பதாலும், நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் சிறப்பாக இருப்பதாலும் ஜூலை 7-ந் தேதி முதல் மின்சாரம் பயன்படுத்துவதில் உள்ள தடைகள் மேலும் தளர்த்தப்படுவதாக, தமிழ்நாடு சட்டப் பேரவையில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் கூறினார்.

தமிழகத்தில் இந்த ஆண்டு பாலிடெக்னிக்குகளில் 1608 இடங்கள் கூடுதலாக்கப்பட்டுள்ளன என்று மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் சட்டப்பேரவையில் தெரிவித்துள்ளார்.

## 5.7.80

தீ விபத்தில் முழுவதுமாக எரிந்து நாசம் அடையும் குடிசைகளின் சொந்தக்காரர்களுக்கு இதுவரை நூறு ரூபாய் உதவிப்பணம் அளிக்கப்பட்டு வந்தது. அதை இருநூறு ரூபாயாக அரசு உயர்த்தியிருக்கிறது.


**Good fortune has dawn on you;**

Yes- Unit Trust Special offer is on.
July - The right time to buy UNITS
- UNITS sold at the lowest price of the year

**UNITS offer a fortune of benefits:**

Safety of capital,
Easy resale.
Attractive returns.
Exclusive tax benefits.

*For further details, contact :*

**The Regional Manager,**
**Unit Trust of India,**
**46, Second Line Beach,**
**MADRAS-600 001.**
**Phone : 27433**

**BUILD UP YOUR SAVINGS UNIT BY UNIT**

**ADVT.**

# மாவட்டங்களின் வளர்ச்சிப் பணிகள்

## செழித்து வளரும் கோவை....

**திரு தி. ச. சிவப்பிரகாசம், ஐ.ஏ.எஸ்.,**
**மாவட்ட ஆட்சித் தலைவர்,**
**—தனி அலுவலர்,**
**கோயம்புத்தூர் நகராட்சி**

**கோ**யம்புத்தூர் நகராட்சியின் முந்திய பரப்பளவு 9.04 ச. மைல் அல்லது 23.5 சதுர கிலோ மீட்டராகும். புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகள் சேர்ந்தபின் இந்நகராட்சியின் பரப்பளவு 41.40 சதுர மைல் அல்லது 106 சதுர கிலோ மீட்டராகும்.

இதன் மக்கட்தொகை 1971-ம் வருடக் கணக்கெடுப்புப்படி 3.51 இலட்சமாக இருந்தது. தற்போது இணைக்கப்பட்டபகுதிகள் சேர்ந்தபின் தற்போதைய மக்கள் தொகை 6.9 இலட்சமாகிறது.

புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகள் சேர்ந்தபின் இந்நகராட்சி மேற்படி பகுதிகளுக்கும் சேர்ந்து பல விரிவான மேம்பாட்டு திட்டங்களைத் தயார் செய்து அமல்படுத்த வேண்டியுள்ளது. மேலும் மேற்படி இணைக்கப்பட்ட பகுதி மக்களுக்கும், கோவை நகர மக்களுக்கு உள்ளது போன்ற சமமான குடி நீர் வசதி, சாலை வசதி, சாக்கடை வசதி, கல்வி வசதி, சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகள் அனைத்தும் பெறும் வகையில் திட்டங்கள் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

விரிவடைந்த கோவை நகராட்சிக்கு நிர்வாகம், பொறியியல் சுகாதாரம், நகரமைப்பு, கல்வி, மின்சாரம், வருவாய் போன்ற பல்வேறு பிரிவுகளுக்கு அதிகாரிகளையும், ஊழியர்களையும் வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் அரசு பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கான முன் மொழிவுகள் அனுப்புவதற்காக நடவடிக்கைகளை நகராட்சி மேற்கொண்டுள்ளது. விரைவில் கோவைமாநகராட்சி ஆகப்போவதால் இதற்கான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றன. கோவை, மாநகராட்சி ஆகிவிடின் இது தமிழ் நாட்டில்இரண்டாவது பெரிய நகரமாக விளங்கும்.

நகரத்தின் தெருக்கள் ஆகியவற்றை தினசரி சுத்தம் செய்து சுகாதாரக் கேடின்றி வைத்திருக்க குப்பை அள்ளும் லாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கோவை நகராட்சியின் பொது சுகாதாரத் துறைக்கு புதிய லாரிகள் 3 அரசினரால் கொடுக்கப்பட்டு, சேரன் போக்குவரத்துக்கழகத்தில் பாடி கட்டுவதற்கு (Body Building) கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் 3 குப்பை லாரிகளும், 2 கழிவு நீர் லாரிகளும் கோவை நகராட்சிக்கு வழங்க அரசின் பரிசீலனையில் உள்ளது. இதைத்தவிர, குடிநீர் விநியோகத்திற்கு 4 லாரிகள் அரசு நகராட்சிக்கு வழங்கியுள்ளது. இவைகளுக்கான டேங்கு (Tank) வேலைகள் முடித்து, ஆகஸ்ட் 1980-க்குள் பொது மக்களின் உபயோகத்திற்கு செயலாற்றப்படும். குடிநீர் விநியோகத்திற்காக மேலும் 2 லாரிகள் கோவை நகராட்சிக்கு வழங்க அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆக மொத்தம் பொது சுகாதாரத்திற்கும், குடிநீர் விநியோகத்திற்குமான கோவை நகராட்சிக்கு அரசு 7 லாரிகள் வழங்கியுள்ளது. இந்த 7 லாரிகளையும் விரைவில் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நகராட்சி மேற்கொண்டுள்ளது. மேலும் பொது சுகாதாரத்திற்கும் குடிநீர் விநியோகத்திற்குமாக கோவை நகராட்சிக்கு மொத்தமாக மேலும் 7 லாரிகள் வழங்க அரசு பரிசீலித்து வருகிறது. இது தவிர தற்போது பழுதடைந்த நிலையிலுள்ள 2 தண்ணீர் லாரிகளும், மற்றொரு குப்பை அள்ளும் லாரியும், தனியார் மோட்டார் தொழிற்சாலையில் பழுதுபார்க்கும் வேலைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

**இதனால் விரைவில் உபயோகத்திலிருக்கும் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். பொது மக்கள் நன்மைக்காக நகரத்தை மிக சுத்தமாக வைத்திருக்க திறமையான நடவடிக்கை எடுக்கப்படும்.**

சிறுவாணி குடிநீர்த் திட்டம் ரூபாய் 16 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதை துரிதப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ரூபாய் 6 கோடி செலவில் பாதாள சாக்கடைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

சேரிகள் திட்டத்தின் கீழ் 1980-1981-ல் ரூ.18- லட்சம், சேரிகள் அபிவிருத்திக்குச் செலவிட நகராட்சியில் துரித நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1980-81-ம் ஆண்டில் சுமார் ரூ.30-லட்சம் பெறுமான சாலை வேலைகள் பல்வேறு பகுதிகளில் செய்யப்படும். மேலும் நகரின் பல்வேறு பகுதிகளில் சுமார் ரூ. 9- லட்சம் செலவில் நவீன கழிப்பிடங்கள் கட்டப்படவிருக்கின்றன.

சிங்காநல்லூர் பகுதியில் ஆழ்துளைக்கிணறுகுடிநீர்விநியோகக் குழாய்கள் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இதனைச் செப்ப

### மதுவும், மாதமும்

ஒருசமயம் பத்திரிகை நிருபர் ஒருவர் பெர்னாட்ஷாவை அணுகி, "ஒவ்வொரு வருடமும் எந்தெந்த மாதங்களிலெல்லாம் மது அருந்தாமல் இருப்பது நல்லது என நீங்கள் கருதுகிறீர்கள்?" என்றார். உடனே, பெர்னாட்ஷா, "அக்டோபர்.... மார்ச்...ஆகஸ்ட்...ஜனவரி...." எனக் கூற நிருபர் அவற்றைக் குறித்துக் கொண்டார். முடிவில் நிருபர் குறிப்பேட்டிலுள்ள மாதங்களை எண்ணிப் பார்க்கையில், அங்கே-12 மாதங்கள் இருந்தன!

—நா. கணேசன், கீழப்பாவூர்

ணிட ரூ. 5.5 லட்சம் செலவில் ஜி.ஐ. குழாய்கள் பதிக்க உடன் நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

தவிர ஆழ்துளைக் கிணறு, திறந்த கிணறுகளுக்கு உபரி மோட்டார்களும், மோனோ பிளாக் செட்டுகளுக்கு பதிலாக நீர்மூழ்கி பம்புகள் வாங்கவும் ரூ. 5/- லட்சம் அளவு செலவு செய்து புதிதாக சேர்க்கப்பட்டுள்ள பகுதியில் நல்ல முறையில் தொடர்ந்து கிணற்று நீரை விநியோகிக்க ஏற்பாடு செய்துள்ளது.

நகராட்சிப் பகுதியிலுள்ள பெரு வழித் துறையைச் சேர்ந்த டாக்டர் நஞ்சப்பா சாலையை அகலப்படுத்தி தார்த்தளமிடவும், மற்றும் பெருவழித்துறையைச் சேர்ந்த வைசியாள் வீதி, சிறுவாணி ரோடு (செல்வபுரம் வரையிலுள்ளது), சிவானந்தா காலனி-மேட்டுப்பாளையம் பைப்பாஸ் ரோடு, பாரதியார் ரோடு, நஞ்சுண்டாபுரம் ரோடு, உக்கடம் பஸ் ஸ்டாண்ட் சாலை, சிங்காநல்லூர் காமராஜ் ரோடு, முதலியவற்றை துரிதப்படுத்திபராமரிப்பு வேலைகளை முடிக்கவும் நெடுஞ்சாலைத் துறை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேட்டுப்பாளையம் பைபாஸ் ரோட்டை இணைக்கும் நகராட்சி பராமரிப்பிலுள்ள சிவானந்தா காலனி ரோடுகளை உடன் செப்பனிட்டுப் பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நகர எல்லைக்குள் மொத்தம் வீதி விளக்குகள் 11,900 உள்ளன. அவற்றில் சுமார் 8,280 பாதரச விளக்குகளாகவும் குழல் விளக்குகளாகவும் உள்ளன.

நகரில் முக்கிய பாதைகளான அவினாசி ரோடு, திருச்சி ரோடு, ஜெயில் ரோடு, மேட்டுப்பாளையம் ரோடு ஆகிய சாலைகளில் அதிக ஒளிதரும் சோடியம் வேப்பர் விளக்குகள் பொருத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. **முதல் கட்டமாக அவினாசி ரோட்டில் எட்டு லட்சம் ரூபாய் செலவு செய்து சுமார் 200 விளக்குகள் பொருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.**

கோவை நகராட்சியுடன் புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளில் 20 காலனிகளில் இதுவரை தெரு விளக்குகள் அமைக்கப்படவில்லை. இதனால்திருட்டு நடைபெற ஏதுவாகிறது என்று புகார்கள் வந்தவண்ணமுள்ளன. இப்பகுதி மக்களுக்கு உடனடியாக தெரு விளக்கு அமைத்துக் கொடுக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் தெரு விளக்கு எரிய வைக்க பொருட்கள் தமிழ்நாடு **மின்சார இலாகாவிற்குத்தேவைப் பட்டால் நகராட்சி அதனைக் கொடுத்து உதவவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

**நகரை அழகு படுத்துவதற்குப் பல திட்டங்கள் :**

அ. கவுளி பிரவுன் சாலையிலுள்ள சர்வே வார்டு எண். 8 சர்வே எண். 137-ல் உள்ள 31 செண்டுநிலப்பரப்பில் நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் குழந்தைகள்பூங்கா ஒன்று அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

ஆ. கோவை நகராட்சி வ. உ. சி. பூங்காவிலுள்ள சிறு வன விலங்கு ( ZOO ) நிலையத்தை அபிவிருத்தி செய்யவும், அழகுபடுத்தவும் மேலும் வன விலங்குகளைக் கொண்டு வந்து குழந்தைகள் சிறுவர்கள் ஆகியோர் பார்வையிடுவதற்கு நல்லதொரு சிறு வனவிலங்கு நிலையம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு சுமார் ரூபாய் 5 லட்சம் மதிப்பில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்படுகிறது.

இ. மேட்டுப்பாளையம்சாலையிலுள்ள பிச்சைக்கார விடுதி அமைந்துள்ளநிலப்பரப்பில் மேட்டுப்பாளையம் சாலையை ஒட்டி கடைகளும், **மீதி இடத்தில் நகராட்சி ஊழியர்களுக்குக் குடியிருப்பும் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.**

ஈ. கோவை நகரின் பிரதான அங்காடியான தியாகி குமரன் அங்காடியை முழுவதும் திருத்தியமைத்து, நவீன வசதிகளுடன் **இரண்டு மாடிக் கட்டிடங்கள், அங்காடிக்கு வரும் பொருட்களை இறக்க வசதி, கடைகளுக்கு நல்ல வசதி, அங்காடிக்குச் செல்லும் பொது மக்களுக்கு வசதி, நவீன கழிப்பிடங்கள் ஆகியவை அமைத்து நவீன அங்காடியாக அமைக்க வீட்டு வசதி மற்றும், நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ரூ.73 இலட்சம் மதிப்பீட்டில் திட்டமிடப்பட்டுள்ளது.**

உ. டாக்டர் நஞ்சப்பா சாலையும், பாரதியார் சாலையும் சந்திக்குமிடத்திலுள்ள காந்திபுரம் நகர்ப் பேருந்து நிலையத்தில் அடுத்த கட்ட அபிவிருத்தியும் அதில் ஒரு வணிக மையம் கட்டுவதற்கும் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஊ. இந்நகராட்சி மொத்தம் 14 பூங்காக்களைப் பராமரித்து வருகிறது. இவற்றில் வ.உ.சி. பூங்கா, காந்தி பூங்கா மற்றும் பாரதி பூங்கா ஆகிய பூங்காக்கள் உட்பட 11 பூங்காக்களையும் அபிவிருத்தி செய்து அழகுற விளங்கும்படிசெய்யப்படும். அதனை தவிர 9 சாலைத் திட்டங்களையும் ( Traffic Islands ) பல்வேறு வங்கிகள் போன்ற தனியார் நிறுவனங்களிடம் பராமரிக்க ஏற்பாடு செய்ய நகராட்சி தொடர்பு கொள்ள திட்டமிடப்பட்டிருக்கிறது.

எ. கோவை நகரில் உள்ள காந்தி பூங்காவில் அமைந்துள்ள நகராட்சி நீச்சல் குளத்தினை அரசு நிதி உதவியுடன் பெரிய பாதுகாப்பான நீச்சல் குளமாக அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



# சேலம் மாவட்டத்தில்

# கல்ராயன் மலையில் புதிய காவல் நிலையம்

மு. முத்துக்காளத்தி, எம்.ஏ.,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்
செய்தி-மக்கள் தொடர்பு
சேலம்-

காவல் நிலையம் ஒன்று பக்கத்தில் இருந்தால், மக்களுக்குஅச்சம் அகன்று, ஆதரவு பெருகி, தைரியம் திரண்டு நிற்கும். அதிலும் குறிப்பாக, ஆள் அரவம் அற்று போக்கு வரத்து வசதிகள் இன்றி தொலைதூர கிராமங்களில் சிதறிக் கிடக்கும் மலைவாழ் மக்களுக்கு, காவல் நிலையம் பக்கத்தில் இருப்பது எவ்வளவு பெரிய பாதுகாப்பு என்று சொல்லத் தேவையில்லை.

மலைவாழ் மக்களின் மேம்பாடு மாநில, மைய அரசுகளின் கண்கண்ட கொள்கையாக இருந்து வருகிறது.

சேலம் மாவட்டம் பெரிய கல்ராயன் மலையில் அண்மையில் புதிய காவல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. மாவட்டக் காவல்துறை அலுவலர் திரு. சந்திரசேகர முன்சினி 9-6-'80 அன்று இந்தக் காவல் நிலையத்தைத் திறந்து வைத்தார். இந்தப் புதிய காவல் நிலையம் கோயில் புதூர் என்ற மலைக் கிராமத்தில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தைச் சுற்றி 36 கிராமங்கள் இருக்கின்றன. இந்த மக்களுக்குக் காவல் துறையின் உதவி தேவைப் பட்டால் இதுவரை 20,25 கிலோ மீட்டர் தூரம் கால்நடையாக நடந்து சென்று, கருமந்துரை காவல் நிலையம் சென்றால்தான் உண்டு. கள்ளங்கபடமற்ற மலை வாசிகள் இப்படிக் கால் கடுக்க நடப்பதைத் தவிர்க்கவே இப்பொழுது புதியதொரு காவல் நிலையம் ஏற்படுத்தப் படுகிறது.

## ரூ. 3½ கோடி செலவில் பால் பவுடர் தொழிற்சாலை

சேலத்தில் ரூ. 3½ கோடி செலவில் பால்பவுடர் தொழிற்சாலை அமைக்கப்படுகிறது. அடுத்த ஆண்டு இந்தத் தொழிற்சாலை செயல்படத் தொடங்கும்.

சேலம் இரும்பாலை அருகே உள்ள தளவாபட்டியில் ரூ. 3½ கோடி செலவில் பால்பவுடர் தொழிற்சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டது. இந்த பால்பவுடர் தொழிற்சாலைக்கு இப்போது ரூ. 10 இலட்சம் செலவில் கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இன்னும் ரூ. 60 இலட்சம் செலவுக்கான கட்டட வேலைகள் நடைபெற இருக்கின்றன. வேலைகள் 1980-ம் ஆண்டு சூலை மாதத்தில் முடிந்து விடும். தொழிற்சாலை 1981-ம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடங்குகிறது. இந்தத் தொழிற்சாலை அருகே கால் நடை பராமரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில் இப்போது ஒரு நாளைக்கு 87 ஆயிரம் லிட்டர் பால் வந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே 300 கூட்டுறவு பால் உற்பத்தி நிலையங்கள் இருந்து வருகின்றன. புதிதாக 300 கூட்டுறவு பால் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

கிருஷ்ணகிரியில் ரூ. 1 லட்சத்து 75 ஆயிரம் செலவில் பால்பவுடர் தொழிற்சாலை அமைக்கப்படுகிறது. இதற்கான வேலைகள் விரைவில் தொடங்கும்.

ஆத்தூரில் ரூ.25 லட்சம் செலவில் பால் குளிரூட்டும் தொழிற்சாலை அமைக்கப்படுகிறது. இந்தத் தொழிற்சாலையில் 30 ஆயிரம் லிட்டர் பால் குளிர்விக்கப்படுகிறது.

# பார்த்தோம் படித்தோம்

### அற்புத இதழ்!

மாண்புமிகு முதல்வர் அவர்களின் வண்ணப்படத்துடன் வந்த இதழ், என் உள்ளத்தைப்பெரிதும் கவர்ந்தது. இந்த அற்புத இதழ் படித்துப் பாதுகாக்க வேண்டிய கருவூலமாக அமைந்துவிட்டது.

—ஆர். அமுதா
வடுகவிருட்சியூர்

### ஆராய்ச்சிக்கு!....

டாக்டர் ஏ. என். பெருமாள் அவர்களின் 'தமிழகத்தின் நாட்டுப்புறக் கலைகள்' என்னும் கட்டுரை, ஆராய்ச்சி மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

—மு. பால்பாண்டி,
மாவடி, நெல்லை.

### சிந்தனைக்கு விருந்து தர....!

'தமிழரசு' இதழில் சிந்தனைக்கு விருந்தூட்டும் செய்திகளும் இடம் பெற வேண்டும்.

—என். சந்திரகேசன்,
சோழவரம்.

### சிறுவர் கதை!...

பி.எல். ஆரின் 'ஆபத்தென்றால் பொய்யும் சொல்லலாம்' என்ற சிறுவர் கதை என்னை மிகவும் கவர்ந்தது.

எஸ். சத்தியமூர்த்தி
பேராவூரணி.

### இனிமை! இனிமை!

'துருவ மீன் போன்றே இருவர் போதும்' என்ற வெற்றியழகன் கொட்டிய கவிதை முரசு இனிமை இனிமை...

— இல. பங்கயம்,
பண்ணுருட்டி.

### புகழ்பரவிட...

தமிழரசு' புதிய அம்சங்களுடன் வருவது கண்டு மிகவும் மகிழ்கிறேன். இன்னும் அதிக அளவில் துணுக்குகள், கதைகள் இடம் பெறவேண்டும்.


— ஜே. இளங்கோவன்,
மன்னார்குடி

### அறிவியல் அரங்கிலே!....

அறிவியல் அரங்கத்தில் இடம் பெற்றுள்ள எஸ்.எஸ். இராமசர்மியின் 'கதிரவன் ஒளிக்கதிர்' கட்டுரை அறியாமையாகிய இருளை நீக்கி எதிர்காலத்தை ஒளிமயமாக்கிட உதவும்.

—சி. மனோகரன்,
கந்தப்பகவுண்டன்வலசு

# வாடிக்கையாளர்களின் இன்றையத் தேவை
# உயர்ந்த தரம்! நியாயமான விலை!!
# அத்தேவைகளைச்சிறப்பாகப் பூர்த்தி செய்யும் பணியில்
# டான்சியின் இணையற்ற சேவை.



ஏற்றமிகு தோற்றம்! எழிலார்ந்த படைப்புகள்! உயர்ந்த தரம்! நியாயமான விலை! இல்லத்திற்கும், அலுவலகத்திற்கும் எழில் கூட்டும் கட்டில், மேஜை, நாற்காலி, சோஃபா, மடக்கு நாற்காலி, எஃகு ரேக்கு, பீரோ போன்ற சாதனங்களுக்கு மட்டுமல்ல டான்சி—

தொழிற்துறைக்கேற்ற இரும்புக் கட்டுமானங்கள், இயந்திரங்கள், கோபுரங்கள், இரும்பு வார்ப்—படங்கள், செப்புக்கம்பிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், பதனிடப்பட்ட பாங்கான தோல், தோலினாலான பொருட்கள், பாதுகாப்புக் காலணிகள், கையுறைகள், சி.ஐ. பைப்புகள், எனாமல் பூசப்பட்ட கம்பிகள், ஃபிரஞ்ச் பாலிஷ், மற்றும் அதைச் சார்ந்த பொருட்களையும் தயாரித்தளிப்பதில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம் டான்சி!

டான்சியின் 55 தொழிற்கூடங்களில் ஆண்டு ஒன்றுக்கு ரூ 16 கோடிக்கும் மேற்பட்ட தொழிற்துறைக்கும் வீட்டு உபயோகத்திற்கும் ஏற்ற பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

*நினைவிருக்கட்டும்—தரத்திற்கோர் சின்னம் டான்சி!*

## டான்சி
## தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை–600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41–7496 TNSI



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கண்களுக்கு குளுமையூட்டும்
பருத்தி, மற்றும் பருத்தியில் அச்சிட்ட
சேலைகள்; கோடைக் காலத்திலும்
குளிர்காலத்தைக்காட்டும் பல
வண்ணச் சேலைகள். நீடித்து
உழைப்பவை.
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

பதிவு எண். M. 8676

# தமிழரசு

